# உதயன்

சுடர் : 36 | கதிர் : 265 | வெள்ளிக்கிழமை | ஆவணி 4ஆம் நாள் 20 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## வவுனியாவில் 3 பெண்களை காவு வாங்கியது கொரோனா

வவுனியா, ஓக. 20

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் 3 பேர் நேற்று 18

# நாட்டை முடக்குவது தொடர்பில் சுகாதார அமைச்சு தீர்மானிக்க முடியாது

## ஜனாதிபதியைக் கைகாட்டுகிறார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஓகஸ்ட். 20

நாட்டில் கொரோனாத் தொற்றுத் தீவிரமடைந்து பேரச்ச நிலை எழுந்துள்ள சூழலில், நாட்டை முடக்குமாறு சுகாதாரத் தரப்பினர், மதத் தலைவர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், நாட்டை முடக்குவது தொடர்பில் சுகாதார அமைச்சு தீர்மானம் எடுக்க முடியாது என்றும் ஜனாதிபதியே அந்தத் தீர்மானத்துக்கு வர முடியும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். 19

## சிறுவர்கள் மத்தியில் வேகமெடுக்கும் தொற்று

கொழும்பு, ஓக. 20

சிறுவர்கள்மத்தியில்கொரோனாத் தொற்றுப் பரவல் மேலும் அதிகரித்துள்ளது 14

## நகரங்களின் சுய முடக்கத்தை வரவேற்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஓக. 20

நாட்டின் சில நகரங்களில் வர்த்தகர்கள் சுயமுடக்கத்தை முன்னெடுப்பதை வரவேற்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 19

## வடக்கில் தொற்று 128

யாழ்ப்பாணம், ஓக. 20

வடக்கு மாகாணத்தில் 740 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் 128 14

## நாட்டை முழுமையாக முடக்குமாறு மகாநாயக்க தேரர்களும் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 20

இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வருவதால் நாட்டை ஒருவார காலத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அரசை வலி 17

## சதொசவில் நிவாரணப் பொதி

கொழும்பு, ஓக. 20

ஆயிரத்து 998 ரூபா பெறுமதியுடைய 20 அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய நிவாரணப்பொதியைசதொச ஊடாக விநியோகிப்பதற்கு 14

## நாட்டை 3 வாரங்களுக்கு முழுமையாக முடக்குங்கள்

### அரசின் பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஓக. 20

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துவருவதால் அதனை கட்டுப்படுத்துவதற்கும், நெருக்கடி நிலைமையை சமாளிப் 19

நாளொன்றுக்கு

## இரட்டைச்சதத்தை நெருங்கும் கொரோனா உயிரிழப்புக்கள்

**தொற்றாளர் எண்ணிக்கையும் 4ஆயிரத்தை அண்மிப்பு**

கொழும்பு, ஓக. 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான மேலும் 186 சாவுகள் நேற்றுமுன்தினம் 17

## முடக்காவிட்டால் சிகிச்சையளிக்க சுகாதாரப் பணியாளர் இருப்பார்களா?

### கொரோனா கட்டுப்பாட்டு சிவில் செயலணி கேள்வி

கொழும்பு, ஓக. 20

தற்போதைய கொரோனாவை நிர்வகிக்க கடுமையான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சுகாதாரப் பணியாளர்கள் எவரும் இருக்கமாட்டார்கள் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் தலைமை பயிற்சி தாதிய அதி 14

## பாணின் விலை அதிகரிப்பு யாழில் இப்போதைக்கில்லை

யாழ்ப்பாணம், ஓக. 20

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்பதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்திருந்தாலும், யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் பதிலைப் பொறுத்தே யாழ்ப் 19

## புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இனியும் காலதாமதம் வேண்டாம்

### கோத்தாவிடம் கோரினார் சம்பந்தன்

கொழும்பு, ஓக. 20

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நீண்ட காலம் கடத்தப்பட்டுள்ள நிலையில் இனியும் காலதாமதங்களை ஏற்படுத்த வேண்டாம். விரைவில் புதிய அரசமைப்பு உருவாக்க வேண்டிய விட 17





## கிளிநொச்சியில் இரகசியமாக திறக்கப்பட்டது ஓ.எம்.பி. அலுவலகம்

கிளிநொச்சி, ஓக. 20

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் (ஓ.எம்.பி.) கிளிநொச்சியில் கடந்த 12ஆம் திகதி திறந்து வைக்கப்பட் 19

## அத்தியாவசியப் பொருள்களை பதுக்கினால் சட்டநடவடிக்கை

### மாவட்டச் செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனி, பால்மா, எரிவாயு போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிகின் 19

## 209 மருத்துவர்கள், 1000 தாதியர்கள் தொற்றால் பாதிப்பு ; ஆறு பேர் சாவு

கொழும்பு, ஓக. 20

நாடளாவிய ரீதியில் 209 மருத்துவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது 14

## நாட்டை முடக்கினால்தான் வீடுகளிலிருப்போம் என்ற எண்ணத்தை மக்கள் மாற்றவேண்டும்

### சுகாதார அமைச்சர் கெஹலிய காட்டம்

18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகக்கவசங்களை வீசுவோர் மீது தயங்காது சட்ட நடவடிக்கை எடுக்கவும்

*அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவு*

கொழும்பு, ஓக. 20
கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக முகக்கவசங்களைப் பயன்படுத்தியபின், அவற்றை சுற்றுச்சூழல் மாசுபடும்வகையில் வீசி எறிவோரையும், சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்காது அவற்றை அப்புறப்படுத்துவோரையும் கைதுசெய்யுமாறு சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
முறையான நடைமுறைகள் இல்லாது முகக்கவசங்களை சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல் தரும் வகையில் அகற்றுவது பேரழிவு தரவல்ல ஒரு நடவடிக்கை. இதனைக்கட்டுப்படுத்த மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்துடன் பலமுறை விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்தகையவர்களைத் தண்டிக்கும் வகையில் சட்டநடவடிக்கை எடுக்க மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை. அதைக் கட்டுப்படுத்துவது பொதுமக்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.
இவ்வாறான போக்கைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறினார்.
இதேவேளை, மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல் ஹேமந்த ஜெயசிங்க, முறையற்ற விதத்தில் சுற்றுச்சூழலுக்குள் வீசி எறியப்படும் முகக் கவசங்களின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு சுமார் 10-12 மில்லியன் என்றும் -அது சுற்றுச்சூழலை அச்சுறுத்தக்கூடிய கடுமையான பிரச்சினை என்றும் -தெரிவித்தார்.
அவ்வாறான முகக்கவசங்கள் பிளாஸ்டிக் பாகத்தைக் கொண்டிருப்பதால், அவற்றை மறு சான்றிதழ் வழங்க உள்ளூராட்சி அமைப்புகள் சரியான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
கடலில் சேர்க்கப்படும் இது போன்ற கழிவுகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது - என்று தெரிவித்தார். (த-இ)

## கிராம அலுவலர்கள் மூவர் தொற்றால் சாவு!

கொழும்பு, ஓக. 20
கொரோனாத் தொற்றுக் காரணமாக இதுவரை மூன்று கிராம அலுவலர்கள் உயிரிழந்துள்ளனர் என அகில இலங்கை கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தின் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்தார்.
அத்துடன், இலங்கையில் பணியாற்றும் 12 ஆயிரம் கிராம அலுவலர்களில் கிட்டத்தட்ட 500 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் -சுமார் 2 ஆயிரம் கிராம அலுவலர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் ஜகத் சந்திரலால் கூறினார்.
கிராம நிர்வாக அலுவலர்கள் கோரிக்கை முன்வைத்தபோதிலும், அவர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களை அரசு வழங்கவில்லை என்றும் - அவர் குற்றஞ்சாட்டினார். (த-இ)

### விளம்பரப் பலகை நிறுவும் விவகாரத்தில்

# யாழ். மாநகரசபையில் நேற்று பெரும் குழப்பம்

## வாக்கெடுப்பை மறுத்து குழுவை நியமித்தார் முதல்வர்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 20**
**யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பலகை நிறுவும் ஒப்பந்தம் தென்னிலங்கை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததால் யாழ். மாநகரசபையில் நேற்று பெரும் குழப்பம் நிலவியது.**

யாழ். மாநகர முதல்வருக்கு தக்க சமயத்தில் கைகொடுக்கும் ஈ.பி.டி.பியும் நேற்றுக்கைநழுவிவிட, முதல்வர் மணிவண்ணன் அணி நேற்று நெருக்கடியைச் சந்தித்தது.
ஈ.பி.டி.பி. இல்லாத நிலைமையை பயன்படுத்த விரும்பிய கூட்டமைப்பு, இந்த விவகாரத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று கடுமையாக வலியுறுத்தியது. எனினும், சிக்கலை உணர்ந்த முதல்வர் மணிவண்ணன் வாக்கெடுப்பை அனுமதிக்கவில்லை. மாறாக, சர்வகட்சிக் குழுவொன்றை அமைத்து அறிக்கை சமர்ப்பிக்கும் திட்டத்துக்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்.
யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட 10 இடங்களில் வீதிக்கு மேலாக விளம்பரப் பலகையிட தென்னிலங்கை நிறுவனமொன்றுக்கு யாழ். மாநகர முதல்வரால் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.
இது முறையற்ற அனுமதி, தன்னிச்சையாக முதல்வரால் வழங்கப்பட்டது. இதன் பின்னணியில் ஏதோ இருக்கிறது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. எனினும், முதல்வர் தரப்பு அதை மறுத்தது.
வீதிகளுக்கு பெயரிட மாநகரசபையால் வழங்கப்பட்ட அனுமதிக்கு இணங்கவே இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டனர்.
இந்த விவகாரத்தை விவாதிக்க சிறப்பு அமர்வை கூட்டும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். 4 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கோரினால் சிறப்பு அமர்வை கூட்ட விதிகள் அனுமதித்திருந்தபோதும், முதலாவது தடவையில் 8 உறுப்பினர்களும், இரண்டாவது தடவையில் 23 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு கடிதம் கொடுத்தும் சிறப்பு அமர்வைக்கூட்ட முதல்வர் மறுத்து விட்டார்.
இதேவேளை, அமர்வில் கலந்து கொள்ள விரும்பாத ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டுச் சென்று விட்டனர்.
இறுதியில், 5 உறுப்பினர்களைக் கொண்ட அனைத்துக் கட்சிகுழு அமைக்கப்பட்டது.
துறைசார்ந்தவர்களுடன் வீதிப் பெயர்களுடன், தமது விளம்பர நடவடிக்கைகளை பேசி, அந்தக் குழு அறிக்கை சமர்ப்பிப்பதென்றும், அதனடிப்படையில்அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.
மதிய போசன இடைவேளையின் பின் அமர்வு கூடியபோது, சபையை நடத்த போதிய உறுப்பினர்கள் இருக்கவில்லை. (15 உறுப்பினர்கள் இருந்தாலே சபையை நடத்த முடியும்). 13 உறுப்பினர்களே சமுகமளித்திருந்தனர். அதனால், நிகழ்ச்சி நிரலின் எஞ்சிய பகுதிகளை விவாதிக்க, இன்று மதியம் மீண்டும் மாநகரசபை கூடவுள்ளது. (த-இ)

### யாழ்ப்பாணம் மோட்டார் வாகன

# போக்குவரத்துதிணைக்களம் இருநாள் சேவைகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 20
நாட்டில் பரவலாக ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்று காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நேற்றைய மற்றும் இன்றைய நாள்களுக்கான கடமைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டச்செயலர் குறிப்பிட்டுள்ளார்.
இந்த இரு நாள்களிலும் நடைபெறவிருந்த மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் அறிவிக்கப்படுகின்ற நேரத்துக்கு நடைபெறும்.
அதேவேளை, 19ஆம் திகதிய பரீட்சைகள் நாளை சனிக்கிழமையும், இன்றைய பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும்.
நேற்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திர செயன்முறைப்பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.
அத்துடன் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் எதிர்வரும் 23 தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதிவரை வழங்கப்பட்ட, வழங்கப்படவுள்ள நுழைவுச்சீட்டுக்கு அமைவாக நாளாந்தம் 50 நுழைவுச்சீட்டுக்கள் என்ற அடிப்படையில் நடைபெறும்.
மோட்டார் வாகன உடைமை மாற்றம் தொடர்பான கடமைகள் யாவும் உரியவர்கள் முற்பதிவுசெய்த ஒழுங்கில் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறும்.
கடந்த ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலாவதித்திகதி முடிவடைகின்ற அனுமதிப்பத்திரங்களுக்கு செல்லுபடியாகும் காலம், காலாவதித் திகதியிலிருந்து 06 மாதங்கள்வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறியத்தரப்பட்டுள்ளது.
இதற்கமைவாக எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்று மாவட்டச் செயலர் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுகாதாரத் தரப்புடன் மல்லுக்கட்டி

# சிகிச்சைக்குச் செல்லமறுத்த தொற்றாளருக்கு எதிராக வழக்கு

வவுனியா, ஓக. 20

**கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் கொவிட் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லமறுத்த வவுனியாவிலுள்ள பிரபல ஹொட்டல் உரிமையாளர் ஒருவருக்கு எதிராக சுகாதாரப் பிரிவினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தனர். அதனையடுத்து, குறித்த உரிமை யாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் ஹொட்டல் நடத்திவரும் அந்த உரிமையாளருக்கு (வயது 59) கடந்த 11 ஆம் திகதி கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவரை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

மறுநாள் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் குறித்த நபரை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்ல முயற்சித்தனர். எனினும், தொற்று உள்ளவர்களை வீட்டில் வைத்து சிகிச்சைசெய்ய முடியும் என்ற சுற்றறிக்கையைக் காட்டி சிகிச்சை நிலையத்துக்குச் செல்வதற்கு ஹொட்டல் உரிமையாளர் மறுப்புத் தெரிவித்திருந்தார். சுற்றறிக்கைக்கு அமைவாக, அவரை வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான உடல்நிலை உள்ளதா என்று பரிசோதித்தபோது அதற்குரிய உடல்நிலையுடன் அவர் காணப்படவில்லை என்பது தெரியவந்தது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். அதன் பின்னர் சுற்றறிக்கைக்கு அமைவாக இத்தகைய நபரை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்க முடியாது என்றும் இதனால் தொற்றாளருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்றும் கூறி அவரை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்ல முயற்சித்தனர். அவர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

அத்துடன், தன்னை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்ல சுகாதாரப் பிரிவினர் மிரட்டினர் என்று ஒன்லைன் மூலம் வவுனியா பொலிஸில் தொற்றாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பொலிஸாருக்கு விளக்கமளித்தனர்.

அத்துடன் தமது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்றும் சுகாதார மருத்துவ அதிகாரி ஹொட்டல் உரிமையாளருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதனையடுத்து ஹொட்டல் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (த-18)




## காராயோ வேலெடுத்து காவுமுந்தன் மயிலேறி...

கோலாகலக் கந்தா கொந்தளிக்கும் அலைகடலாய்
ஓயாது உன்பதிக்கு ஓடி வருவார் அடியார்
மண்ணே தெரியாதப்பா மனமுருகி வேண்டிடுமுன்
பொன்னாம் அடியவரின் பொற்சிரமே தெரியுமையா...

என்ன இது? என் தலமா? ஏங்கி மனம் பதைக்குதையா
உள்ளேயா உன்பவனி? உனைவணங்கும் அடியவர்கள்
தூரப்புறவீதி துரத்திடவும் மனங்கொண்டு
போகவுந்தான் முடியாமல் புலம்புகிறார் உனைநினைந்து..

சூராதி சூரனையே சுமக்க வைத்த நல்லைநகர்
வீராதி வீரகந்தா..! வீறுகொண்டு பயமுறுத்தும்
கோரமெடுத்து ஆட்சி செய்யும் கொரோனாவால் உன்னடியார்
மாழப் பொறுத்திடவும் மனங்கொண்டு நின்றாயோ...
ஓடத் துரத்தியதை ஓலமிடும் அடியவரைக்
காராயோ...? வேலெடுத்து காவுமுந்தன் மயிலேறி...

கலைமாமணி கலைஞானச்சுடர்
***தீவக தியாகன்***



## 13 பேருக்குத் தொற்று; முடக்கப்பட்டது கல்மடு

வவுனியா, ஓக. 20

வவுனியா புளியங்குளம் கல்மடு கிராமத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 13 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனையடுத்து குறித்த கிராமம் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

கல்மடு கிராமத்தில் சிலருக்கு காய்ச்சல் இருப்பதாக வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று எழுமாறாக அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது 13 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

10 நாள்களின் பின்னர் மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே குறித்த கிராமம் முடக்க நிலையிலிருந்து விடுபடும் என்று சுகாதாரப் பிரிவினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-110)

## மன்னாரில் 18 நாள்களில் 300 பேருக்கு கொரோனா

தலைமன்னார், ஓக. 20

மன்னாரில் இதுவரை ஆயிரத்து 341 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் நேற்றுமுன்தினம் வரை மாத்திரம், 300 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சமூகத்திலிருந்து 977 பேரும், மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் 347 பேரும் தொற்றுநோயாளர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இதுவரை 27 ஆயிரத்து 409 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-60)

## பல்கலை மாணவி சடலமாக மீட்பு

கொடிகாமம், ஓக. 20

பல்கலைக்கழக மாணவி ஒருவர், தவறான முடிவு எடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், தாவளை இயற்றாலை பகுதியைச் சேர்ந்த மகேந்திரம் துஷாந்தினி (வயது 24) என்பவரே உயிர்மாய்த்தார். அவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-159)

# எம்.பி. இல்லாத தென்மராட்சிப் பகுதிக்கு தென்பகுதியின் இரு எம்.பிக்கள் நிதிஒதுக்கீடு

சாவகச்சேரி, ஓக. 20

நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிநிதி இல்லாத சாவகச்சேரி தொகுதியில், அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள தென் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஒரு தொகை நிதியை, இந்தவருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒதுக்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஏழு வேலைத்திட்டங்களுக்காக 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு திட்ட முன்மொழிவையும், நாடாளுமன்ற உறுப்பினரும் மருத்துவருமான திருமதி ஹரிணி அமரசூரிய மூன்று வேலைத் திட்டங்களுக்காக 2 லட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளனர். திருமதி ஹரிணி அமரசூரிய, மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த 50 ஆயிரம் ரூபாவும், எழுதுமட்டுவாழ் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு குழாய்க் கிணறு மற்றும் மலசலகூடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும், மிருசுவில் வடக்கு பாரதி முன்பள்ளிக்கு குடிதண்ணீர் வசதி மேற்கொள்ள 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, மட்டுவில் வடக்கு புவனேஸ்வரி அம்மன் கோவில் மற்றும் கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி கோவில் ஆகியவற்றுக்கு கட்டப் பொருள்கள் வழங்க தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்தித் சங்கம், மந்துவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்ய தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்ய ஒரு லட்சம் ரூபாவும் கைதடி வடக்கு செவன்த் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்து முன்மொழிவை அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை தொடக்கம்

# புதுக்குடியிருப்புப் பிரதேச வர்த்தக நிலையங்கள் பூட்டு

**முல்லைத்தீவு, ஓக. 20**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலையங்களை நாளை சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை பூட்டி கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர் சங்கம் நேற்று வர்த்தகர்களைக் கூட்டி தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

இதன்படி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள மருந்தகங்கள், ரயர் ஒட்டுக்கடைகள் என்பன உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மக்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள மக்களை கொரோனாவின் பிடியில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் முச்சக்கரவண்டி சங்க நிர்வாகம், சிகைஅலங்கரிப்பு சங்க நிர்வாகம் என்பன வர்த்தகர் சங்கத்தின் ஒன்று கூடலில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என்று புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்க தலைவர் நீதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிவிப்புக்கள் பிரதேச வாழ் மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்படவுள்ளதுடன், புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மக்கள் தங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை இன்று கொள்வனவு செய்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மதிக்காது வர்த்தக நிலையங்களை திறப்போருக்கு எதிராக புதுக்குடியிருப்பு சுகாதாரப் பிரிவினரின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வர்த்தக நிலையங்களும் தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-19)




## வவுனியாவில் 146 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி

வவுனியா, ஓக. 20

வவுனியா மாவட்டத்தில் மேலும் 146 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் மற்றும் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய 146 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-18)



## உள்ளீடுகள் வழங்கல்

வவுனியா,ஓக.20

வவுனியா மாவட்டத்தில் சமுர்த்தி அருணலு வேலைத்திட்டத்தின் கீழ் பறண்நட்டகல் ஓமந்தை கிராம அலுவலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு கருத்திட்டத்துக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

## சாவ.வர்த்தக நிலையங்கள் திங்கட்கிழமை முதல் பூட்டு!

சாவகச்சேரி ஓக. 20

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வார காலத்துக்கு மூடுவதற்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் அதிவேகமாகப் பரவிவரும் கொவிட் பரவல் காரணமாக நேற்று நடைபெற்ற விசேட செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு ஏனைய பிரதேசங்களிலிருந்து வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பொதுமக்களும் பல்வேறு தேவைகளுக்காக வருகின்றனர். இவர்கள் நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் பொருள்கள் கொள்வனவு செய்கின்றனர்.

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதுடன், மரணங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் பிரதேச மக்களையும் வர்த்தகர்களையும் பாதுகாக்க எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான ஒரு வார காலத்துக்கு அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மன்றத் தலைவர் ந.சிவபாலன் அறிவித்துள்ளார். (ம-9)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரேநாளில் 32 தொற்றாளர்!

முல்லைத்தீவு, ஓக. 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாள்தோறும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் மாத்திரம் 32 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரப்பகுதியில் 5 பேருக்கும், முள்ளியவளையில் ஒருவருக்கும், புதுக்குடியிருப்பில் 9 பேருக்கும், ஒட்டுசுட்டானில் 9 பேருக்கும், மல்லாவி பிரதேசத்தில் 5 பேருக்கும், வெலிஓயா பிரதேசத்தில் 3 பேருக்குமாக 32 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 15ஆம் திகதி 10 பேரும், 16ஆம் திகதி 30 பேரும், 17ஆம் திகதி 16 பேரும், 18 ஆம் திகதி 32 பேரும் என நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்கள் தற்போது அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். (ஐ-19)

## தென்மராட்சியில் 70வீதமானோருக்கு ஏற்றப்பட்டது கொரோனாத் தடுப்பூசி

சாவகச்சேரி, ஓக. 20

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு வரை 30 வயதுக்கு மேற்பட்ட 70 வீதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது என பிராந்திய சுகாதார திணைக்களத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோர் 39 ஆயிரத்து 628 பேர் உள்ள நிலையில், நேற்றுமுன்தினம் வரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் 27ஆயிரத்து 579 பேருக்கு முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இவர்களை விட ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரி




பணியக பிரிவுகளில் வதியும், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அந்தந்த பணியக பிரிவுகளில் தடுப்பூசி பெற்றிருப்பார்கள். இவர்களையும் சேர்த்தால் இதுவரை பிரதேசத்தைச் சேர்ந்த 80 வீதமானவர்கள் முதலாவது டோஸ் தடுப்பூயை ஏற்றியுள்ளனர்.

மேலும் 11 ஆயிரம் பேர் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 3 லட்சத்து 44 ஆயிரத்து 766 பேர் உள்ளனர். இவர்களில் நேற்றுமுன்தினம் வரை 2 லட்சத்து 80 ஆயிரத்து 540 பேர் முதலாவது டோஸையும், ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 339 பேர் இரண்டாவது டோஸையும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைகளை மூடுமாறு கோரிக்கை



கொழும்பு, ஓக. 20
கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொழும்பு நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களை மூட வேண்டும் என்று கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்த கொழும்பு நகரத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களையும் சில நாள்களுக்கு மூடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவர் இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் நேற்றுமுன்தினம் நகரத்தில் உள்ள அனைத்து கடைகளையும் மூடுவதற்கான வர்த்தகர் சங்கங்களின் நடவடிக்கையை வரவேற்ற ரோஸி சேனாநாயக்க, இலாபத்தைப் பற்றி சிந்திக்காமல் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கது மற்றும் வரவேற்கத்தக்க நடவடிக்கை என்றும் கூறினார். (எ-இ)

# தலிபான் ஆட்சியை ஏற்கவே வேண்டாம்

## தூதரகத்தை உடன் அகற்றுமாறு அரசிடம் ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஓக .20
**தீவிரவாதிகளின் மத்திய நிலையமாக ஆப்கானிஸ்தான் மாறும் அபாயம் உள்ளது. எனவே, தலிபான்களின் ஆட்சியை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்கக்கூடாது. காபூல் நகரிலுள்ள தூதரகத்தை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைக்கு முகங்கொடுத்து வரும் உலக நாடுகளுக்கு, தற்போது புதியதொரு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தை தலிபான் அமைப்பு கைப்பற்றியுள்ளதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தலிபான் அமைப்பு இதற்கு முன்னர் ஆப்கானிஸ்தானை ஆட்சிசெய்த போது ஜிஹாத் குழு மற்றும் தீவிரவாதக்குழுக்கள் அங்கு அதிகரித்தன. செப்ரெம்பர் 11 தாக்குதலை நடத்திய அல் குவைதா அமைப்பும் ஆப்கானிஸ்தானில்தான் செயற்பட்டது. எனவே, தலிபான்களின் ஆட்சியின்கீழ் ஜிஹாத் வாதத்தை பரப்பும் குழுக்கள் மற்றும் தீவிரவாதக் குழுக்களின் மத்திய நிலையமாக ஆப்கானிஸ்தான் மாறும் என்ற சந்தேகம் மேலோங்கியுள்ளது. இதனை நாமும் நினைவில் கொள்ள வேண்டும்.

குர் ஆனில் உள்ள விடயங்களை தவறாக புரிந்துகொண்டு உலகிலுள்ள அரசுகள் மற்றும் மக்கள்மீது தாக்குதல் நடத்தப்படுவதை அனுமதிக்க முடியாது. சம்பிரதாயபூர்வமான முஸ்லிம் நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் இவ்விவகாரம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

தலிபான்களின் ஆட்சியை ஏற்க வேண்டும் என்பது பொறுப்பு கிடையாது. சாதாரண நிலைமை ஏற்பட்டு தீவிரவாதக்குழுக்கள் இல்லாவிட்டால் அந்த ஆட்சியை ஏற்கலாம்.

அதேவேளை, காபூல் நகரிலுள்ள தூதரகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மத்திய கிழக்கு ஆசியாவுக்கு தூதரகமொன்று வேண்டுமெனில் வேறு நாட்டில் அதனை அமைக்கலாம். எனவே, தற்போது தலிபான் ஆட்சியை ஏற்காது, எதிர்காலம் குறித்து சிந்தித்து தீர்மானமொன்றை அரசு எடுக்க வேண்டும்.

தலிபான்கள் தீவிரவாத குழுக்களின் மத்தியபுள்ளியாக மாறினால் அதனை தடுப்பது குறித்தும் பயணங்களை கட்டுப்படுத்துவது சம்பந்தமாகவும் அரசு கவனம் செலுத்த வேண்டும். பாமியன் புத்தர் சிலைகளை அழித்தொழித்த தலிபான் அமைப்பை அங்கீகரித்தால், எமது வலயத்தில் இல்லாதொழித்த பயங்கரவாதம் மீண்டும் உருவாகக்கூடும். என்று தெரிவித்துள்ளார். (எ-44)

# 2,188 பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஓக. 20
கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 188 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து முழுமையாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 16 ஆயிரத்து 528ஆக அதிகரித்துள்ளது. (ம)

# மாகாணங்களுக்கு இடையே பயணிக்க கூடியோர் விவரம்

கொழும்பு, ஓக. 20
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பயணக் கட்டுப்பாடுகளுக்கு அமைய மாகாணங்களுக்கு இடையே பயணிக்கக் கூடியவர்கள் தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

சுகாதார சேவைகளில் ஈடுபடுவோர், பொலிஸ் மற்றும் முப்படைகள், அரச அதிகாரிகள், முக்கியமான உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்வோர், அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்போர், அத்தியாவசிய சேவை வழங்குநர்கள், நெருங்கிய குடும்ப உறுப்பினரின் மரணத்துக்குச் செல்வோர் (ஆதாரம் தேவை), துறைமுகங்களுக்கான பொருள்கள் அல்லது போக்குவரத்து மற்றும் விமான நிலையத்துக்குச் செல்வோர் (ஆதாரம் தேவை) ஆகியோரே மாகாணங்களுக்கு இடையே பயணிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

ஈஸ்டர் தாக்குதல்

# சந்தேக நபர்களுக்கு மறியல்காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக. 20
ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதானோரில், 62 பேரை மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறித்த தாக்குதல் சம்பவத்துடன் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட அனைவரும், வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், மீண்டும் நேற்று விசாரணைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேகநபர்கள் அனைவரும், கடந்த காலங்களில் அம்பாறை காத்தான்குடி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பொலிஸாரின் ஆட்சேபனையை அடுத்து அனைத்து சந்தேகநபர்களதும், விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டது. செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டது. (ம)



# டெல்டாவின் புதிய திரிபுகள் தொடர்பில் இன்று அறிக்கை

கொழும்பு, ஓக. 20
நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸின் டெல்டா தொற்றின் புதிய திரிபுகள் தொடர்பாக சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பரிசோதனை அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது என்று குறித்த பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறைப் பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் டெல்டா கொரோனா வைரஸ் திரிபின் 3 பிறழ்வுகள் பரவலடைந்து வருவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன அண்மையில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து, இந்த பிறழ்வுகள் தொடர்பான பரிசோதனைகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடொன்றுக்குள் புகுந்து சொத்துக்கள் உடைப்பு

## ஐந்து பேர்கொண்ட குழு மலையாளபுரத்தில் அடாவடி

**கிளிநொச்சி, ஓக. 20**

**வீடு ஒன்றினுள் புகுந்த இளைஞர் குழுவொன்று நடத்திய அட்டகாசத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் சேதமடைந்துள்ளன.**

இந்தச் சம்பவம் கிளிநொச்சி மலையாளபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மலையாளபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரின் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற ஐந்துக்கு மேற்பட்ட இளைஞர் குழு நடத்திய தாக்குதலில் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, இரண்டு மோட்டார் சைக்கிள்கள், தளபாடங்கள் மற்றும் வீட்டின் ஜன்னல்கள் உள்ளிட்ட சொத்துக்கள் என்பன சேதமடைந்துள்ளன.

அத்துடன் இக் கும்பல் வீட்டிற்குள் நுழைவதனை



அவதானித்த வீட்டின் உரிமையாளரான கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் பின் வழியால் தப்பிச் சென்ற நிலையில், அவரது மகன் மீது தந்தை எங்கே என்று கேட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-113-214)





# திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்ப்பாணம் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் மூன்றாவது நவீன திறன் வகுப்பறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் நிதி உதவியின் கீழ் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை கழகத்தின் உறுப்பினர் சட்டத்தரணி தி.அர்ச்சுனாவால் திறக்கப்பட்டது.

திறன் வகுப்பறையின் நினைவுப் பலகையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் திரைநீக்கம் செய்து வைத்தார். (ஐ-26)

# அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 20

புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'ஆளுமை விருத்தியில் அரங்கச் செயற்பாட்டின் வகிபங்கு' என்னும் விடயத்தில் இளம் ஆற்றுகையாளர் எஸ்.ஆர்.சாது கதையாடவுள்ளார். ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் வழங்கவுள்ளார். (ஐ)

# மெய்நிகர் திருமந்திரம் வேள்வித் தொடர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 20

கனடா திருமூலர் யோக அறச்சாலை ஆன்மீகத் திண்ணை நடத்தும் இணையவழி மெய்நிகர் திருமந்திரம் வேள்வித்தொடர் நிகழ்வு இரு நாள்கள் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மற்றும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரம் இரவு 7 மணிக்கு (கனடா நேரம் காலை 9.30) நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இறைவணக்கம், குருவணக்கம். வரவேற்புரை சைவப்புலவர் சாமித்தம்பி பொன்னுத்துரை வழங்கவுள்ளார்.

21ஆம் திகதி மனவளக்கலைப் பேராசிரியர் மருத்துவர் பாலசுப்பிரமணியம் திருமந்திரத்தில் மருத்துவம் மூச்சின் சூட்சுமத் தொடர் 7, மருத்துவர் கே.சங்கரநாராயணன் திருமந்திரம் காட்டும் கருமூலம் ஆகிய விடயங்களிலும் உரையாற்றவுள்ளனர்.

22ஆம் திகதி சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் செஞ்சொல்வேந்தர் செ.த.குமரன் 'திருமந்திரம் கூறும் நிலையாமை', தங்கத்துரை சரவணன் 'திருமந்திரம் கூறும் கேள்வி கேட்டமைதல்' ஆகிய விடயங்களிலும் உரையாற்றவுள்ளனர். (ஐ)



# மரக்கடத்தல் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 20

சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 11 முதிரை மரக்குற்றிகள் மற்றும் மரக்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனம் என்பனவற்றையும் அக்கராயன் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பல்லவராயன் கட்டுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தல் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அக்கராயான் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-113-214)

# பொலிஸ் பொறுப்பதிகாரியாக காஞ்சன விமலவீர நியமனம்!

நெல்லியடி.ஓக.20

யாழ்ப்பாணம் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தர பொறுப்பதிகாரியாக காஞ்சன விமலவீர நியமிக்கப்பட்டு, தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

மல்லாவி பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகராக கடமையாற்றிய இவர் இடமாற்றத்தின் அடிப்படையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கடந்த சில வருடங்களுக்கு முன் நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் உப பரிசோதகராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-19)



# மாத்தறை கடற்கரையில் ஒதுங்கியது திமிங்கிலம்!



கொழும்பு, ஓக. 20

மாத்தறை, பொல்ஹேன கடற்கரையில் இறந்த நிலையில் திமிங்கிலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

திமிங்கிலம் இறந்தமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வர்த்தகர்களுக்கு ஒரு 'சல்யூட்'!

**கொ**ரோனாப் பெருந்தொற்று பேரலையாகத் தீவிரமாகி வரும் நிலையில் நாடளாவிய ரீதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் தாம் சார்ந்த சங்கங்களுடன் கலந்துரையாடி சில கனதியான முடிவுகளை அறிவித்துள்ளன. வர்த்தக நிலையங்களால் மேற்கொள்ளப்படும் கொவிட் எச்சரிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை விட, தமது வியாபாரத்தை குறிப்பிட்ட நாள்களுக்கு முடக்கி பொதுமக்களை ஒன்றுகூட விடாமல் செய்வதற்கு இந்தச் சங்கங்களும் வர்த்தக நிலையங்க ளும் எடுத்த முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் அது தகும்.

நாடளாவிய ரீதியில் பல இடங்களில் இந்தத் தன்னுணர்வு முடக்கம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சில வாரங்களுக்கு மேற்படி வர்த்தக நிலையங்கள் தமது இலாபத்தை இழக்கவுள்ளன. மக்கள் நலனுக்காக தமது இலாபத்தை இழந்து அவர்கள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு உரிய பதிலை – கனதித்தன்மையை– – மரியாதையை பொதுமக்கள் வழங்குவார்களா? என்று கேட்டால் அதற்கு எந்த உத்தரவாதத்தையும் எவராலும் தரமுடியாது. ஏனென்றால் அத்தகைய விதிமுரணில்தான் எமது மக்களின் பொறுப்புணர்வு அமைந்துள்ளது என்பது இம்மியும் சந்தேகம் இல்லாத விடயம். அது கவலைக்கும் பரிதாபத்துக்கும் உரியதும்கூட.

பொதுமுடக்கம் ஒன்றை செயற்படுத்துங்கள், குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்குங்கள் என்று அரசுக்கு சுகாதாரத் துறையினரும், பல்வேறு தரப்பினரும் பல அழுத்தங்களைக் கொடுத்தும் எந்தப் பயனும் இல்லாதவிடத்துத்தான் இந்த தன்னுணர்வு முடக்கம் செயற்படுத்தப்படுகின்றது. அதாவது அரசுக்கு இல்லாத அக்கறை எமது வர்த்தகர்களுக்கு வந்துள்ளது. அவர்களின் அக்கறைக்கும், வர்த்தக இழப்புக்கும் நாம் உரிய பதிலை எமது செயற்பாடுகளில் வழங்கவில்லை என்றால் அது பெரும் பாவமாகும். அவர்களுக்குச் செய்யும் அநீதியாகவும் அது அமையும்.

எனவே பொதுமக்கள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். சிறகு விரித்துப் பறந்து திரியாது கொஞ்சம் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளுங்கள். உங்களில் உங்களுக்கே இல்லாத அக்கறையால்தான் இன்று நாடே சுடுகாடாக மாறிக் கொண்டிருக்கின்றது. அதே காரணத்தால்தான் இன்று தன்னுணர்வு முடக்கத்தை அறிவித்து, பல வர்த்தக நிலையங்கள் இலாபத்தை இழந்து நிற்கின்றன. இந்த நெருக்கடியில் இலங்கை மக்களாகவும், மனிதாபிமானம் உள்ளவர்களாகவும் மனக் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

வெறும் மூன்று வாரங்களாகவது இதய சுத்தியுடன் வெளித் தொடர்புகளைத் துண்டித்து எம்மை நாமே தனிமைப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். இன்று கொவிட் தொற்று கட்டுப்படுத்தப்பட்ட நாடுகளில் அந்தந்த நாட்டு மக்களின் மனக் கட்டுப்பாடும் சட்டத்தை மதிக்கும் தன்மையும்தான் அத்தகைய வெற்றிக்குப் பேருதவியாக அமைந்தன. அதேநேரம், கொரோனாவால் பேரழிவைச் சந்தித்த நாடுகளின் நிலைக்கும் மக்களின் பொறுப்பற்ற தன்மைதான் காரணமாக அமைந்தது. கொஞ்சமாவது பொறுப்புணருங்கள். தனித்திருங்கள், துணிந்திருங்கள், தள்ளியே இருங்கள்.

இந்த நாட்டின் அரசுகூட நாட்டை முடக்கத் தயங்கும் சூழமைவில், தங்கள் இலாபம் போனாலும் பரவாயில்லை , மக்கள் நலமுடன் இருக்க வேண்டுமென்பதற்காக சுயமுடக்கத்தை நடைமுறைப்படுத்தும் வர்த்தகர்கள் அனைவரும் போற்றுதற்குரியவர்கள்...!



### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

# காணி அபகரிப்பு காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் பதியவும்

**யாழ்ப்பாணம். ஓக. 20**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனியாரின் காணிகளில், பொலிஸார் மற்றும் முப்படையினரின் பாவனை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கும் குடும்பங்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.**

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விவரங்களை உரிய படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு அனைத்து பிரதேச செயலர்களுக்கும் மாவட்ட செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார். இது தொடர்பான இணைய வழி தரவுத்தளம் ஒன்றும் செயற்படுத்தப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின்போது காணி அபகரிப்புத் தொடர்பில் அந்தந்த பிரதேச மக்கள் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்திய போதிலும் எவ்விதமான காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பின்னர் நடைபெற்ற காணி அபகரிப்புகளுக்கு அளவீடு இடம்பெறுவதும், அதற்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் மேற்கொண்டு அளவீட்டை நிறுத்துவதும் தொடர்கதையாக நீள்கின்றது. இத்தகையதொரு நிலையில் இவ்வாறானதொரு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)



# காடழிப்பை தடுக்கக் கோரி வீதிகள் எங்கும் வாசகங்கள்

முல்லைத்தீவு, ஓக. 20

முல்லைத்தீவு, அளம்பில் பகுதியில் இடம்பெறும் காடழிப்பை தடுக்கக் கோரி வீதிகள் எங்கும் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு தொடக்கம் முள்ளியவளை வரையான வீதிகளில் குறித்த வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

"இராணுவமே எமது அளம்பில் காட்டை காப்பாற்று", எமது காடுகளை விற்கும் கிராம அபிவிருத்திச் சங்கம், இலஞ்சம் வாங்கி அளம்பில் வடக்கு காடுகளை விற்கும் வன வளத்திணைக்களம், பிரதேச செயலரே எமது வளத்தை காப்பாற்றுங்கள் போன்ற வாசகங்களே இவ்வாறு எழுதப்பட்டிருந்தன. (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடநாடு வழக்கில் குற்றவாளிகள் சிக்குவர்

### மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஓக.20
கொடநாடு வழக்கில் விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
தமிழக வரவு - செலவுக் கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொடநாடு வழக்கில் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன்பு நிறுத்தப்படுவார்கள் என தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்துள்ளோம்.
அரசியல் நோக்கம் இல்லாமல் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் மறு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இது பழிவாங்கும் செயல் இல்லை. உரிய விசாரணை நடைபெற்று வருகின்றது.
விசாரணையின் அடிப்படையில் உண்மை குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். வேறு எவரும் அச்சப்பட தேவையில்லை. இந்த அரசு சட்டத்தின் ஆட்சியை நடத்தும் - என்றார். (எ-இ)

# இந்தியாவில் போலித் தடுப்பூசி

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**புதுடில்லி, ஓக.20**
**இந்தியாவில் போலி கோவிஷீல்டு தடுப்பூசிகள் கண்டறியப்பட்டுள்ளன என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ராஜெனகா மருந்து நிறுவனமும் கூட்டாக உருவாக்கப்பட்ட தடுப்பூசியை இந்தியாவில் புனேயில் உள்ள இந்திய சீரம் நிறுவனம் கொவிஷீல்டு என்ற பெயரில் தயாரித்து சந்தைப்படுத்துகின்றது.
இந்தத் தடுப்பூசி, இந்திய அரசின் தடுப்பூசி திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த தடுப்பூசியின் போலிகள் நடமாட்டம் கண்டறியப்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.
இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்தியாவிலும், உகாண்டாவிலும் கோவிஷீல்டு தடுப்பூசியின் போலி தயாரிப்புகள், நோயாளிகள் மட்டத்தில் கண்டறியப்பட்டு, அதை தடுப்பூசி உற்பத்தியாளர்கள் (புனே இந்திய சீரம் நிறுவனம்) சரி பார்த்துள்ளனர்.
கொவிஷீல்ட் தடுப்பூசியின் உண்மையான உற்பத்தியாளர் (புனே இந்திய சீரம் நிறுவனம்) இந்த எச்சரிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள தயாரிப்புகள் போலியானவைதான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த போலியான தடுப்பூசிகள் இந்தியா மற்றும் உகாண்டாவில் நோயாளிகள் மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசிகளின் அடையாளம், கலவை அல்லது ஆதாரத்தை மோசமாக, தவறாக சித்திரித்ததன் அடிப்படையில் போலித் தயாரிப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இரு கலவைகளில் போலி தடுப்பூசி குப்பிகளின் தொகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஒன்று 5 மில்லிக்கு கீழேயும், மற்றொன்று 2 மில்லி குப்பிகளிலும் வந்துள்ளன.
இதன் உற்பத்தி மற்றும் காலாவதி திகதிகள் பொய்யானவை. போலியான தடுப்பூசிகள் உலகளாவிய பொது சுகாதாரத்திற்கு ஆபத்து ஏற்படுகிறது.
நோயாளிகளுக்கு கெடுதி ஏற்படுவதைத் தடுக்க இந்த தவறான தயாரிப்புகளை புழக்கத்தில் இருந்து கண்டறிந்து அகற்றுவது முக்கியம். என்றுள்ளது. (எ-இ)

## பாம்பை வணங்கியவர் பாம்பு தீண்டி மரணம்!

பாட்னா, ஓக. 20
ஜார்க்கண்ட் மாநிலம் பாட்னா அருகே கோயிலுக்கு கும்பிடச் சென்றவர், பாம்பை கழுத்தில் மாலையாகச் சுற்றியதில், பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.
கோயிலுக்குச் சென்ற நபர், வழியில் பாம்பைக் கண்டுள்ளார். அது கடவுள் அனுப்பிய தூதர் என்று கூறி வணங்கியுள்ளார். அத்தோடு விடாது பாம்புக்கு தீபாராதனைகள் காட்டி, பாம்பை எடுத்து கழுத்தில் போட்டுக் கொண்டார். இதைப் பார்த்த அக்கம் பக்கத்தினரும் பக்தி பரவசத்தோடு, பூஜைகளை நடத்தினர். பாடல்களைப் பாடியும் நடனமாடியும் கிராமத்தினர் பக்தி பரவசத்தில் ஆழ்ந்திருந்தபோது, பாம்பு அந்த நபரைத் தீண்டியுள்ளது.
விஷம் உடல் முழுக்க பரவ, மயங்கி விழுந்த நபரை, உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லாமல், அந்த கிராமத்திலிருந்த மந்திரவாதியிடம் அழைத்துச் செல்ல முயற்சித்துள்ளனர். ஆனால், அந்த மந்திரவாதியும் கிராமத்தில் இல்லாத நிலையில் அந்த நபர் உயிரிழந்துள்ளார். அவரது உடலை பரிசோதித்த மருத்துவர்கள், உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு வந்திருந்தால் பிழைக்க வைத்திருக்கலாம் என்று கூறியுள்ளனர். (எ-இ)

## குடியரசு தலைவருக்கு அறுவை சிகிச்சை

புதுடில்லி, ஓக. 20
இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குடியரசுத் தலைவரின் செய்தித் தொடர்பு செயலாளர் அஜய் குமார் சிங் இது தொடர்பில் தெரிவிக்கையில்,
டில்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு நேற்றுக் காலை கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
சிகிச்சை முடிவடைந்து குடியரசுத் தலைவர் நலமுடன் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார்.
- என்று தெரிவித்தார். (எ-இ)



# ஜெகன்மோகன் ரெட்டிக்கு 2 கோடி ரூபாவில் கோயில்

சென்னை, ஓக்.20
ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு நவரத்னலு ஆலயம் என்ற கோயில் மற்றும் அருங்காட்சியகம் கட்டப்பட்டுள்ளது.
நவரத்தின திட்டங்களைக் கொண்டு வந்தமைக்காக, சித்தூர் அருகே ஸ்ரீகாளஹஸ்தி பகுதியில், முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிக்காக சட்ட மன்ற உறுப்பினர் மதுசூதன் ரெட்டி 2 கோடி ரூபா செலவில் இந்தக் கோயிலை கட்டியுள்ளார்.
இந்தக் கோயிலை ஆந்திர மாநில துணை முதல்வர் கே. நாராயணா சுவாமி தொடங்கி வைத்தார். ஜெகனண்ணா வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு திட்டம், இந்தக் கோயிலுக்கு பின்பகுதியில் அமைந்துள்ளது. அதுவும் திங்கள்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.
ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஜெகன்மோகன் ரெட்டியால் கொண்டு வரப்பட்டது நவரத்னலு திட்டம். அந்த திட்டம் தொடர்பாக மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்த கோயில் கட்டப்பட்டுள்ளது என்று மதுசூதனன் கூறியுள்ளார்.
இந்தக் கோயிலை வடிவமைக்க தமிழகம் மற்றும் கர்நாடகத்திலிருந்தும் கட்டட நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டனர். இந்த கோயில் வளாகத்தில், கண்ணாடி மாளிகை, நவரத்னலு கோயில் மற்றும் மாநில அரசின் ஏழைகளுக்கான வீடு திட்டத்தின் மாதிரி வீடு உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. (எ-இ)

## ஐ.எஸ்ஸுடன் தொடர்பு; இரு பெண்கள் கைது

சென்னை, ஓக.20
கேரளாவில் ஐ.எஸ். அமைப்பினருக்கு ஆதரவாக செயற்பட்ட இரண்டு பெண்கள் தேசிய புலனாய்வு அமைப்பால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் சமூக வலைத்தளங்களில் ஐ.எஸ் அமைப்பின் கொள்கைகளை பரப்புரை செய்துள்ளனர என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை ஜிகாத் எனும் போரில் பங்கேற்க இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இவர்களிடம் விசாரணைகளை முன்னெடுப்ப[illegible] தெரிய [illegible] வித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நேற்றைய தொடர்ச்சி)

# மெடமுலான வம்சம்:

## டொன் அல்வின் ராஜபக்சவின் நான்கு மகன்மாரும் மூன்று பேரப்பிள்ளைகளும்

ஆங்கிலத்தில்: டி.பி.எஸ் ஜெயராஜ்

தமிழில் : பாலன்



### குரக்கன் நாடு

பிரிட்டிஷாரால் கடைப்பிடிக்கப்பட்ட கிராமத்தலைவர் என்ற அரை நிலப்பிரபுத்துவ பதவி நடைமுறை இப்போது கிராம நிலதாரி முறைமையினால் பதிலீடு செய்யப்பட்டுவிட்டது. இன்றைய கிராம நிலதாரிகள் அதிகாரமற்ற அரச ஊழியர்களாக இருக்கின்ற அதேவேளை, காலனித்துவகால விதான ஆராச்சி அவரது அதிகாரத்தின் கீழ் இருந்த பகுதிகளில் ஒரு சிறு எதேச்சாதிகாரியாகவே செயற்பட்டார். ராஜபக்ச குடும்பம் வாழ்ந்த பகுதி கிருவேவ/ கிருவப்பட்டுவ என்று அறியப்பட்ட பிரிவாகும். அது பயிர்கள், மரக்கறி வகைகள், தென்னந்தோட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை உள்ளூர் பொருளாதாரத்தின் அடிப்படைகளாகக் கொண்ட ஒரு விவசாயப் பிரதேசமாகும். சேனைப்பயிர்ச்செய்கை வழமையானதாக இருந்தது. குரக்கன், திணை அல்லது சாமை பயிர்ச்செய்கை வழமையானதாக இருந்தது. பொதுவில் அந்த. பிராந்தியம் " குரக்கன் நாடு " என்று கருதப்பட்டது.

டி.டி.ராஜபக்சவுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். மூத்தவர் டொன் கரோனிலிஸ் ராஜபக்ச அல்லது டி.சி.ராஜபக்ச. அவர் அந்தப் பகுதியின் மரணவிசாரணை அதிகாரியாக பதவி வகித்தார். இரண்டாவது மகன் டொன் மத்தியூ ராஜபக்ச. இளைய மகன் டொன் அல்வின் ராஜபக்ச. நேரடியான தேர்தல் அரசியல் பிரவேசத்தை முதலில் செய்தவர் டொன் மத்தியூ ராஜபக்ச அல்லது டி.எம். ராஜபக்ச. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அரச சபை உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு பிறகு இளைய சகோதரர் டொன் அல்வின் ராஜபக்ச அல்லது டி.ஏ.ராஜபக்ச அரச சபை உறுப்பினரானார். சுதந்திரத்துக்கு பிறகு அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

கிருவப்பட்டுவ ராஜபக்சக்கள் பெரிதும் மதிக்கப்பட்ட பழைய தென்மாகாண கொவிகம குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆழமான பௌத்த வேர்களைக் கொண்டவர்கள். விவசாயத்துடன் ஒன்றித்து போனவர்கள். காலனித்துவ ஆசான்களிடமிருந்து பதவிகளையும் வசதி வாய்ப்புக்களையும் பெற்ற வேறு சில முன்னணி சிங்கள குடும்பங்களைப் போலன்றி கிருவப்பட்டுவ ராஜபக்சக்கள் மனவுறுதியுடன் சுதந்திரமானவர்களாக வாழ்ந்தார்கள்.

அந்த திடகாத்திரமான சுதந்திரம் மற்றும் காலனித்துவ விரோத உணர்வுக்கு முதல் உதாரணம் " ருஹுணுவின் சிங்கம்" என்று பிரபல்யமாக அறியப்பட்ட டி.எம்.ராஜபக்சவே. சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட 1931ஆம் ஆண்டில் அரச சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டபோது அம்பாந்தோட்டை தொகுதியில் டி.எம்.ராஜபக்ச வி.எஸ்.விக்கிரமநாயக்கவை ஆதரித்தார். அவர் தெரிவு செய்யப்பட்டார்.

1936 ஆம் ஆணடில் டி.எம்.ராஜபக்சவே நேரடியாக அரசியலில் இறங்கி தேர்தலில் போட்டியிட்டார். அந்தக்காலத்தில் வேட்பாளர்கள் தங்களது வாக்குப்பெட்டிகளுக்கு வெவ்வேறு நிறங்களை பயன்படுத்தினார்கள். டி.எம். மண்ணிறத்தை தெரிவுசெய்தார். அது குரக்கன் நாட்டை அடையாளப்படுத்தும் நிறமாகும். அவர் 12,097 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார்.

### டொன் மத்தியூ ராஜபக்ச

டொன் மத்தியூ ராஜபக்ச ஒரு மக்கள் தலைவர். அவர் ஒடுக்கப்பட்ட- வசதிகுறைந்த- மக்களின் நலன்களுக்காகவே குரல்கொடுத்தார். றொடியா சமூகத்தின் மேம்பாட்டுக்காக அவர் பாடுபட்டார். கிருவப்பட்டு வவை அடையாளப்படுத்துவதற்காக முதலில் குரக்கன் நிறச்சால்வையை அணியும் நடைமுறையை ஆரம்பித்தவர் டி.எம்.ராஜபக்சவேயாவார். இந்த நடைமுறைக்குப் பிறகு அவரது சகோதரராலும் சகோதரரின் மகன்களாலும் பின்பற்றப்பட்டது. இன்றைய ராஜபக்சக்களினால் அணியப்படும் " சாட்டக " வெறுமனே ஒரு நேர்த்தியான கவர்ச்சி எண்ணத்தின் அடிப்படையிலானதல்ல. அந்த நடைமுறைக்கு ஆழமான அர்த்தமுடைய வேர்கள் இருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக டி.எம்.ராஜபக்ச 1945 ஆம் ஆண்டில் 49 ஆவது வயதில் காலமானார். அந்த வேளையில் அவரது மூத்த மகன் லக்ஸ்மன் வாக்களிப்பதற்கான தகுதி வயதை (21 வயதை )எட்டவில்லை. அதனால் தேர்தலில் போட்டியிடும் பொறுப்பு டி.எம்.மின் தன்னடக்கமான இளைய சகோதரர் டொன் அல்வின் ராஜபக்சவின் தோளில் வீழ்ந்தது. அவர் நவம்பர் 6, 1905 பிறந்தவர்.

அவர்களது தந்தையார் டி.டி.ராஜபக்ச 1912 ஆம் ஆண்டில் இறந்தார். டிஎம்.ராஜபக்ச சமூகசேவையிலும் அரசியலிலும் ஈடுபட்ட அதேவேளை, அவரது சகோதரர் டி.ஏ. ராஜபக்ச குடும்பத்தின் தொழிலான விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டார். மூத்த சகோதரர் கொண்டகலவில் மகாகெதரவிலும் இளையவர் மெடமுலான மகாகெதரவிலும் வாழ்ந்தார்கள்.

டொன் அல்வின் ராஜபக்ச மாத்தறை பலதுவவைச் சேர்ந்த டோனா டண்டினா சமரசிங்க திசாநாயக்கவை மணந்தார். அவர்களுக்கு 6 ஆண் பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் பிறந்தார்கள். அவர்களின் பெயர்கள் சமால், ஜயந்தி, மஹிந்த, ரியூடர், கோத்தா பய, பஸில், டட்லி, பிரீதி, காந்தனி. டி.எம்.ராஜபக்சவின் மறைவுக்கு பிறகு கிருவப்பட்டுவ மக்கள் சகோதரரின் வழியைப் பின்பற்றி டி.ஏ.ராஜபக்ச அரசியலில் இறங்கவேணடும் என்று





விரும்பினார்கள். டி.எம்.ராஜபக்சவின் மகன்கள் லக்ஸ்மனும் ஜோர்ஜும் அந்த வேளையில் மிகவும் இளையவர்களாக இருந்தார்கள். விவசாயத்து டன் திருப்திப்பட்டு வாழ்ந்துகொண்டிருந்த டி.ஏ. மறுத்தார்.

இறுதியில் கிராமத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் குழுவொன்று டி.ஏ. உழுதுகொண்டிருந்த வயலுக்கு ஊர்வலமாகச் சென்றது. அவர்கள் தங்களிடமிருந்த நியமனப்பத்திரங்களைக்காட்டி அரச சபைக்கு தேர்தலில் போட்டியிடுமாறு டி.ஏ.யை வற்புறுத்தினர். டி.எம்.மின் இடத்தை அரசசபையில் டி.ஏ. நிரப்பவேண்டும் என்பதே கிராமத்தவர்களின் வலியுறுத்தல்.

### டொன் அல்வின் ராஜபக்ச

இறுதியில் டொன் அல்வின் ராஜபக்ச இணங்கிக் கொண்டார். கைகளிலும் கால்களிலும் இருந்த சேற்றை கழுவிவிட்டு அவர் நியமனப்பத்திரங்களில் கைச்சாத்திட்டார். அப்போது அங்கு நின்ற ஆதரவாளர்களில் ஒருவர் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக தனது சால்வையை கழற்றி டி.ஏ.யின் கழுத்தில் அணிவித்தார். அதற்கு பிறகு குரக்கன் சாட்டக பாரம்பரியம் தொடர்ந்தது. அம்பாந்தோட்டை தொகுதியை அரச சபையில் பிரதிநிதித்து வப்படுத்தி ஜூலை 14, 1945 போட்டியின்றி அவர் தெரிவு செய்யப்பட்டார்.

டி.ஏ.ராஜபக்ச காலி றிச்மண்ட் கல்லூரியின் பழைய மாணவர். ஆங்கிலத்தில் திறமை யுடையவர். கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் கிரிக்கெட் அணியின் உப தலைவராகவும் இருந்தவர் . மொரட்டுவ பிரின்ஸ் ஓஃப் வேல்ஸ் கல்லூரியுடனான ஆட்டத்தில் அவர் நிகழ்த்திய சாதனை இன்னமும் முறியடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இருந்தாலும் முழுஅளவி லான விவசாயியாக வருவதில் அவருக்கு எந்தவிதமான மனச்சங்கடமும் அவருக்கு இருந்ததில்லை. அரச சபைக்குள் ஓகஸ்ட் 8, 1945 பிரவேசித்து பதவிப்பிரமாணம் செய்தபோது டி.ஏ. விவசாயம் மற்றும் காணி தொடர்பான நிறைவேற்றுக்குழுவின் ஒரு உறுப்பினரானார்.

டி.ஏ. ராஜபக்ச நாடாளுமன்றத்தில் பெலியத்த தொகுதியை (1960 ஆம் ஆண்டு ஒரு குறுகிய காலம் தவிர)1947 தொடக்கம் 1965 வரை பிரதிநிதித்து வப்படுத்தினார். 1960 மார்ச் பொதுத்தேர்தலில் ஐ.தே.க.வின் டி.பி.அத்தபத்துவிடம் டி.ஏ. தோல்விகண்டார். 1965 பொதுத்தேர்தலிலும் மீண்டும் அதே அத்தபத்துவிடம் அவர் தோல்வி கண்டார். 1947 ஆம் ஆண்டில் ஐ.தே.க.வின் வேட்பாளராக பெலியத்தையில் ராஜபக்ச போட்டியிட்டு வெற்றிபெற்றார். பிறகு அவர் 1965 வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகவே தேர்தல்களில் போட்டியிட்டார். டொன் அல்வின் ராஜபக்ச எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவராக விளங்கினார். பண்டாரநாயக்க ஜூலை 12, 1951 ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறினார். நாடாளுமன்றத்தில் அவர் கட்சிமாறியபோது ஐந்து பேர் ( ஏ.பி.ஜெயசூரிய, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா, ஜயவீர குறுப்பு, டி.எஸ்.குணசேகர, டி.ஏ.ராஜபக்ச ) அவரைப் பின் தொடருவர் என்று கருதப்பட்டது. ஆனால், அந்தத் தருணம் வந்தபோது டி.ஏ.ராஜபக்ச மாத்திரமே பண்டாரநாயக்கவை நிழல் போல் பின் தொடர்ந்து கட்சி மாறினார். மற்றவர்கள் கட்சி மாற பயந்தாலும் பின்னர் பண்டாரநாயக்கவின் பக்கத்துக்கு வந்தார்கள். செப்ரெம்பர் 2, 1951 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைக்கப்பட்டது. கட்சி தொடங்கப்படுவது பற்றிய அறிவித்தலில் கைச்சாத்திட்ட 44 பேரில் டி.ஏ. யும் ஒருவர். 1952 மே பொதுத்தேர்தலில் புதிய கட்சியான சுதந்திர கட்சி ஒன்பது ஆசனங்களை வென்றது. வெற்றிபெற்றவர்களில் டி.ஏ யும் ஒருவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை சுயாதீனம் மதிக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 20

**நீதிபதிகளை மாநாடொன்றுக்கு அழைத்து நீதித்துறை நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்கள் ஊடாக பெரும் முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் சஜித் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நீதிபதிகளை நியமித்தல், பதவி உயர்வு, சேவை தரம் கீழ்நிலைப் படுத்தல், இடமாற்றம் மேற்கொள்ளும் அதிகாரம் ஆகிய அதிகாரங்கள் நீதித்துறை சேவை ஆணைக் குழுவுக்கு உள்ளன.

ஆயினும் நீதி நிர்வாகம் தொடர்பான பரிந்துரைகள், உத்தரவுகள் அல்லது ஆலோசனைகளை வழங்க அதிகாரம் இல்லை.

இத்தகைய தேவையற்ற செல்வாக்கு, சட்டவாட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தில் 20ஆவது திருத்தத்தின் தாக்கத்தின் மீதான பொது மக்கள் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு, நிறைவேற்றதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியன மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதுடன், நீதித்துறையின் சுதந்திரத்திற்கு சவால் விடும் சகல விடயங்களுக்கு எதிராக தாம் முன் நிற்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (எ-இ)

# அதிர்ஷ்டலாபச்சீட்டு அச்சிட்டவர் கைது!

கொழும்பு, ஓக. 20

தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைப் போன்று 11 போலிச் சீட்டுகளை சட்டவிரோதமாக அச்சிட்ட ஒருவரைப் பலாங்கொடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பலாங்கொடை நெல்லிவெள பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கடந்த 6ஆம் திகதி விநியோகிக்கப்பட்டு சந்தைக்கு விற்பனைக்கு வந்த 3 வெற்றி இலக்கங்களை கொண்ட 11 அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைப் பலாங்கொடை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சீட்டுகள், 2 ஆயிரம் ரூபா வெற்றித் தொகைக்கு மேலதிகமாக பரிசு கிடைக்கும் வகையில் இலக்கங்கள் மாற்றப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (ஓ-22)



# எக்ஸ்பிரஸ் பேர்ள் விசாரணை விரைந்து முடிக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஓக. 20

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் தீ விபத்து தொடர்பான விசாரணையை விரைவாக முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த வழக்கு, நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம, நீதிமன்றத்தில் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார். கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு, எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சான்றுகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்களை ஆராய்ந்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் தீ விபத்து தொடர்பான விசாரணையை உடனடியாக முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது. (எ-இ)

# ரயில்வே ஊழியர்கள் 360 பேருக்கு தொற்று

கொழும்பு, ஓக. 20

ரயில்வே திணைக்களத்தில் இதுவரையில் 360 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள காரணத்தினால் சுமார் 10 ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்றும் ரயில்வே பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறு மூடப்பட்ட ரயில் நிலையங்களில் கரையோர மார்க்கத்திலான 5 ரயில் நிலையங்களும் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# 4 வயதுச் சிறுமியின் அசத்தலான சாதனை

அம்பாறை, ஓக. 20

அம்பாறை நிந்தவூரைச் சேர்ந்த எம்.ஜே.பாத்திமா அனத் ஜிதாஹ் 'கிறேன் மாஸ்டர்' மகுடத்தையும், ஆசிய நாடுகளின் கொடிகளை மிக வேகமாக அடையாளம் காணக்கூடியவர் என்ற பட்டத்தையும் வென்று இலங்கை நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் பிறந்த இவர், தனது 4 வயதில் 48 நாடுகளின் கொடிகளை வெறும் 24 வினாடிகளில் வேகமாக அடையாளம் கண்டு ஆசியச் சாதனை புத்தகத்தில் பெயரை பதித்துள்ளார்.

சிறு வயதிலேயே சிறந்த ஞாபகசக்தியும் பல திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர் ஆங்கிலத்தை சரளமாக வாசிக்க எழுத பேச தெரிவதுடன், கணிதம் உள்ளிட்ட பாடங்களிலும் மிகத் தேர்ச்சியாகத் திகழ்கின்றார். (ஐ-இ)

## போக்குவரத்து விதியை மீறும்

# வாகனங்களின் சாரதிகளுக்கு தண்டத்துடன் சமூகப் பணி

சாவகச்சேரி, ஓக. 20

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துவோருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் தண்டப் பணத்துடன், 40 மணி நேர சமூக பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிடப்படுகிறது.

முன்னைய ஆண்டுகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை மட்டும் 40 தொடக்கம் 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்று பணித்தது.

தற்போது போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துவோருக்கும் நீதிமன்றில் தண்டம் விதிக்கப்படுவதுடன், 40 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுத்த உத்தரவிடப்படுகிறது.

இந்த வருடத்தில் நேற்றுமுன்தினம் வரையான காலப்பகுதியில் 125 பேரை சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் தடுப்பூசித் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!




**யாழ்ப்பாணம், ஓக. 20**

**யாழ்ப்பாணத்திலும் இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம், நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குறித்த வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

நாடளாவிய ரீதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே யாழ்ப்பாணத்திலும் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி, யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பிரிவினர் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம.ஜ-20)

## சடலங்களை ஒன்றாக இட்டு தகனம் செய்வதற்கு திட்டம்



கொழும்பு, ஓக. 20

பாணந்துறை ஆதார வைத்திய சாலையில் கொவிட் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் இதனால் சடலங்களை ஒன்றாக இட்டு தகனம் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நகர சபைத் தலைவர் நந்தன குணதிலக்க இதனை தெரிவித்துள்ளார். டயர்களை வைத்து விறகுகளால் சடலங்களைத் தகனம் செய்யக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தகனம் செய்வதற்காகத் தற்காலிகமாக தகனச்சாலைகளை வெளியே அமைப்பதற்கான திட்டங்கள் இருந்தாலும், அதிக பணத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கும். பாணந்துறை நகர எல்லையில் ஒரே ஒரு தகனச்சாலை இருப்பதால், ஒரு நாளில் அதிக பட்சம் மூன்று சடலங்களை மாத்திரம்தான் எரிக்கலாம் என்பதால் கோரகான, மொறட்டுவ, வாதுவ உள்ளிட்ட சுற்றுப் பகுதிகளில் உள்ள தகனச்சாலைகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளாந்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் தகனச்சாலையில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## தானாக முடிவெடுத்து முடங்கிய நுவரெலியா

கொழும்பு, ஓக. 20

கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் முகமாக, நுவரெலியா கொட்டகலை பிரதேசத்திலுள்ள அனைத்து கடைகளையும் நேற்று முதல் மூடுவதற்கு கொட்டகலை பிரதேச சபை மற்றும் கொட்டகலை வர்த்தகர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 26ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு கொட்டகலையிலுள்ள அனைத்து கடைகளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலையின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை மற்றும் நகரத்தில் பல கொரோனா இறப்புகள் பதிவாகியுள்ளமை ஆகியனவற்றில் கவனம் செலுத்தியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொட்டகலை பிரதேச சபை மற்றும் வர்த்தகர்கள் சங்கம் என்பன தெரிவித்துள்ளன. மேலும் கொட்டகலை நகரத்தின் அனைத்து பகுதிகளையும் கிருமி நீக்கம் செய்து, சுத்தம் செய்யவதற்கு தீர்மானித்துள்ளதாக பிரதேச சபை குறிப்பிட்டுள்ளது. (ம)

## தடுப்பூசித் தாமதமே இறப்புக்கு காரணம்

*மனோ குற்றச்சாட்டு*



கொழும்பு, ஓக. 20

கொரோனாத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்குவதில் அரசாங்கம் காட்டிய தாமதமே, மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொரோனாவை கட்டுப்படுத்த தம்மால் முடியாது என்பதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே, சுகாதார அமைச்சை முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் கையளித்துள்ளார். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்காக எதிர்க்கட்சி என்ற வகையில் தாம் ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் எனவும் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## *யாழ்ப்பாண மாவட்டத்தில்* தடுப்பூசியை இதுவரை பெறாதோர் நடமாடும் சேவை ஊடாக பெறவும்

***யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டும் தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளாதோர் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்று மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று இந்த நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் தடுப்பூசி தொடர்பில் பயத்துடன் இருந்திருக்கலாம். ஆனால் இனி அந்தப் பயத்தை தவிர்த்து தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள். நாடு பூராகவும் இந்தத் தடுப்பூசி வழங்கும் திட்டமானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

வீடுகளில் இருந்து தடுப்பூசி நிலையம் சென்று தடுப்பூசி பெறமுடியாதவர்களுக்காக நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளோம்: எனவே தற்போதைய நிலைமையில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தவறியவர்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுங்கள் - என்றார். (ஜ-26)

## 12 மில். பேருக்கு முதலாவது டோஸ்

கொழும்பு, ஓக. 20

நாட்டில் இதுவரை ஒரு கோடியே 19 லட்சத்து 32 ஆயிரத்து 934 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.




தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டதாவது:

நாட்டில் இதுவரை ஒரு கோடியே 19 லட்சத்து 32 ஆயிரத்து 934 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது. அதேபோல் 48 லட்சத்து 48 ஆயிரத்து 471 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் மாத்திரம் 21 ஆயிரத்து 685 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன், 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஜ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை நகரம் முற்றாக முடங்கியது!

திருகோணமலை, ஓக. 20
கொரோனாத் தொற்றுக் காரணமாக திருகோணமலை நகரம் நேற்று முற்றாக முடங்கியது.
திருகோணமலை வர்த்தகர் சங்கம் மற்றும் வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கிணங்க மரக்கறிச் சந்தை, மீன் சந்தை மற்றும் தனியார் கடைகள் நேற்று முதல் ஒரு வார காலத்துக்கு திருகோணமலை நகரில் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
திருகோணமலையில் வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்றை தடுத்து மக்களை பாதுகாக்கும் வகையிலேயே, மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
அத்தியாவசிய சேவைகளாகிய மருந்தகங்கள், உணவகங்கள் மற்றும் பலசரக்கு கடைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறக்கப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

(ஐ)





## மேல் மாகாணத்தில் புதிய சிகிச்சை முறை

கொழும்பு. ஓக. 20
மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் நோய் நிலைமைக்கு அமைய சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்புதல் அல்லது வீட்டில் வைத்து பராமரிப்பதற்காக நேற்று முதல் புதிய முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
மேல் மாகாணத்தினுள் புதிய முறைமை செயற்படுத்தப்படவுள்ளது என்று கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. புதிய முறைமையின் கீழ் 1904 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் ஒன்றில் தனது நோய் நிலைமை தொடர்பாக தொற்றாளர் அறிவிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.
குறுந்தகவல் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## கொரோனாத் தொற்றால் இரு மாணவர்கள் இறப்பு

கொழும்பு, ஓக. 20
நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.
இசிப்பத்தான கல்லூரியைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவர் ஒருவரும் கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயதுடைய மாணவி ஒருவருமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
இசிப்பத்தான கல்லூரியைச் சேர்ந்த சமித்த டில்துஷான், களுபோவில கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
ஓகஸ்ட் 14ஆம் திகதி மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சமித்த டில்துஷான், மேலதிக சிகிச்சைகளுக்காக தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



# இன்றுமுதல் 25 வரையில் முடங்குகிறது கிளிநொச்சி

**கொழும்பு, ஓக. 20**
**கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை முதல் 25 ஆம்திகதி வரை தங்களது வர்த்தக நிலையங்களை பூட்டுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,
நாளுக்குநாள் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். இதுவொரு ஆபத்தான நிலைமை. எனவே வர்த்தகர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது வர்த்தக நிலையங்களை சில நாள்களுக்கு பூட்டி, தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த தீர்மானித்துள்ளோம்.
அந்த வகையில் எதிவரும் 20 ஆம்திகதி முதல் 25ஆம் திகதி வரை மருந்தகங்கள், வாகனத் திருத்தகங்கள் தவிர ஏனைய அனைத்து வியாபார நிலையங்களையும் பூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தக் காலப்பகுதிகளில் வர்த்தகர்கள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள கொவிட் 19 பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் தங்களை பரிசோதித்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் - ன்றுள்ளது.

(ம-6)

## மன்னார் மாவட்டத்தில் 58,378 பேருக்கு போடப்பட்டது முதலாவது டோஸ் தடுப்பூசி

மன்னார், ஓக. 20
மன்னார் மாவட்டத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசி 58 ஆயிரத்து 378 பேருக்கும், இரண்டாவது டோஸ் தடுப்பூசி 44ஆயிரத்து 588 பேருக்கும் போடப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.
மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 76 சதவீதம் முதலாவது தடுப்பூசியும், 55 சதவீதமானோருக்கு இரண்டாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. மன்னாரில் நேற்றுவரை மொத்தம் ஆயிரத்து 330 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னாரில் இதுவரை 13 கொரோனா உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன.
மன்னாரில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் பொதுமக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். கொரோனா தொடர்பான குணங்குறிகள் தென்பட்டால் அச்சப்படாமல் அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
மேலும் மருத்துவமனையில் போதுமான இட வசதிகள் இல்லாமையால் சில நோயாளிகள் பிரதேச மருத்துவ அதிகாரிகளின் மேற்பார்வையில் வீடுகளிலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றனர் - என்றார். (ஐ-213)

## மூடப்பட்டது நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலை

கொழும்பு, ஓக. 20
நாட்டில் கொரோனாத் தொற்றின் தீவிரம் அதிகரித்து வருகின்ற நிலையில், நாடாளுமன்றத்தின் சமையலறை மற்றும் சிற்றுண்டிச் சாலை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் தற்காலிகமாக உணவுகளை வெளியில் இருந்து கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, நாடாளுமன்ற அதிகாரிகள், பணிக்குழாமினர் உள்ளிட்ட 275 பேருக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 12 பேருக்கு கொவிட் 19 தொற்றுறுதியாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

ஜலாலாபாத்தில் வெடித்தது

காபூல், ஓக. 20

**ஆப்கானிஸ்தானில் ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட அதிபர் அஸ்ரப் கானியின் ஆட்சி அகற்றப்பட்டு அங்கு தலிபான்கள் ஆட்சியமைத்துள்ள நிலையில், தலிபான்களுக்கு எதிராக ஜலாலாபாத்தில் பொதுமக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.**



தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் தேசியக் கொடியை தமது ஆட்சிக்கு முற்றிலும் விரோதமானதாகக் கருதுகின்றனர். இந்த நிலையில் ஜலாலாபாத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் நாட்டின் தேசியக் கொடிக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேசியக் கொடியை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக் காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைக் கலைக்க தலிபான்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்றும் இதனால் சில இறப்புக்கள் நேர்ந்துள்ளன என்றும் சிலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் முதல்கட்ட தகவல்கள் வெளிவந்துள்ளன.

முன்னதாக, தலிபான்களின் ஆட்சியை ஏற்காத ஆப்கானிஸ்தானின் முதலாவது கெரில்லாப் படை, தலிபான்களுக்கு எதிராக சரணடையப் போவதில்லை. தாக்குதல்கள் தொடரும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ஐக்கிய அரபு அமீரகத்தில் அஸ்ரப் அரசியல் தஞ்சம்!

காபூல், ஓக. 20

ஆப்கானிஸ்தானின் அதிபர் அஸ்ரப் கானி எங்கு சென்றுள்ளார் என்பது மர்மமாகவே இருந்துவந்த நிலையில், அவருக்கு அரசியல் தஞ்சம் கொடுத்துள்ளது ஐக்கிய அரபு இராச்சியம்.

தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய பின்னர் ஆப்கானிஸ்தானின் அதிபர் அஸ்ரப் கானி எங்கு சென்றார் என்பதில் மர்மம் நிலவியது. அவர் தஜிகிஸ்தானுக்குச் சென்றுள்ளார் என்று ரஷ்ய ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. இந்த நிலையில் கானி தமது நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று ஐக்கிய அரபு இராச்சியம் தெரிவித்துள்ளது.

'மனிதாபிமான அடிப்படையில் அவர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்' என்று ஐக்கிய அரபு இராச்சியம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)



## பணத்துடன் வரவில்லை தகவல்கள் முழுப்பொய்

காபூல், ஓக. 20



அஸ்ரப் கானி ஆப்கானிஸ்தானை விட்டுத் தப்பிச்செல்லும்போது ஹெலிகொப்டர் நிறைய பணத்துடன் சென்றார் என்று ரஷ்ய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ள நிலையில், அதை மறுத்துள்ளார் அஸ்ரப் கானி.

காணொலி ஒன்றில் அஸ்ரப் கானி தோன்றி உரையாற்றியுள்ளார். அதில் அவர்,

நான் 4 பெட்டிகள் நிறைய அரசின் 16.90 கோடி அமெரிக்க டொலருடன் தப்பிச் சென்றேன் என்று தகவல் வெளியானது. அது முற்றிலும் தவறானது. நான் ஆப்கானிஸ்தானை விட்டுச் செல்லும்போது என்னுடன் ஒரு ஜோடி ஆடைகளும், உள்ளாடைகளும், ஒரு செருப்பும் மட்டுமே எடுத்துச் சென்றேன். எனக்கு பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்று கூறுவதும் முற்றிலும் பொய்யான தகவல் நான் தஜிகிஸ்தானில் இல்லை, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருக்கிறேன்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையையும், என்னுடைய குணத்தையும் அழிப்பதற்காகவே இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இது முற்றிலும் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு. நான் ஆப்கானிஸ்தானுக்கு திரும்பி வருவது தொடர்பாக பேச்சு நடத்திவருகிறேன். விரைவில் நாடு திரும்புவேன். ஆப்கான் பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அமைதிப் பேச்சு தோல்வியில் முடிந்ததால்தான், தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

ஆப்கானிஸ்தானில் காபூல் நகரில் நான் தொடர்ந்து தங்கியிருந்தால், காபூல் நகரம் சிரியா, ஏமன் போன்று மாறியிருக்கும். நான் தொடர்ந்து அதிபராக இருந்திருந்தால், அப்பாவி மக்கள் என் கண்முன்னே தலிபான்களால் தூக்கில் தொங்க விடப்பட்டிருப்பார்கள்.

இது நம்முடைய வரலாற்றில் மிகப் பெரிய பேரழிவாக இருக்கும்.

இதுபோன்று இறப்பதற்கு நான் அஞ்சவில்லை, ஆனால் ஆப்கானிஸ்தானுக்கு அவமதிப்பு வருவதை நான் ஏற்கமாட்டேன். ஆப்கானிஸ்தான் ரத்தக்களரியாக மாறுவதைத் தவிர்க்கவே நான் நாட்டைவிட்டு வெளியேறினேன். நாட்டின் அரசியல் நிலையை சீர் செய்ய முன்னாள் அதிபர் ஹமீத் கர்சாய், தலிபான்கள் இடையிலான பேச்சுக்கு நான் ஆதரவாக இருக்கிறேன் என்றார். (ம)

## ஷரியத் சட்டத்தின்படியே ஆப்கானிஸ்தானில் ஆட்சி

காபூல், ஓக. 20

ஜனநாயக ஆட்சிக்கு ஆப்கானிஸ்தானில் இடமில்லை. ஷரியத் சட்டத்தின்படித்தான் ஆப்கானிஸ்தான் ஆட்சி செய்யப்படும் என்று தெரிவித்தார் ஆப்கானிஸ்தானின் செய்தித் தொடர்பாளர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் ஜனநாயக ரீதியான ஆட்சிக்கு இடமில்லை. என்னவிதமான அரசியல்முறையை ஆப்கானிஸ்தானில் செயல்படுத்தலாம் என்றெல்லாம் நாங்கள் ஆலோசிக்கமாட்டோம். ஏனென்றால் எங்களுக்கு ஷரியத் சட்டம் இருக்கிறது. அதன்படி ஆட்சி நடக்கும்.

இங்கு ஜனநாயக முறைக்கு எந்த வழியும் இல்லை, ஏனென்றால் ஜனநாயக முறைக்கான எந்த அடிப்படைக் கட்டமைப்பும் இங்கு இல்லை. தலிபான் தலைவர்களுடனான கூட்டம் இந்த வார இறுதியில் நடைபெற உள்ளது, அப்போது நாட்டை நிர்வாகம் செய்வது குறித்த முடிவுகள் எடுக்கப்படும்.

கடந்த முறை அதாவது 1996-2001ஆம் ஆண்டுவரை தலைவர் முல்லா ஓமர் தலைமையில் எவ்வாறு ஆட்சி நடந்ததோ அதேபோன்றுதான் இந்தமுறையும் ஆட்சி அமையலாம். மூத்த தலைவரான ஹெய்பத்துல்லா அகுன்ஜதா நிர்வாகக் குழுவின் தலைவராக இருப்பார் - என்றார். (ம)



ஹெய்ட்டியில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. சடலங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமையால் இறப்புத் தொடர்பான உத்தியோகபூர்வத் தகவல்களை தற்போது தெரிவிக்க முடியாது என ஹெய்ட்டி அரசு அறிவித்துள்ளது. அத்துடன் ஒரு மாதத்துக்கு குறித்த பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சதொசவில்...

தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இன்று முதல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இந்த பொதி விநியோகிக்கப்படவுள்ளது.

1998 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குபவர்களுக்கு குறித்த நிவாரணப் பொதி வீட்டுக்கே கொண்டு வந்து தரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

2ஆயிரத்து 600 ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 20 அத்தியாவசியப் பொருள்களே இந்த நிவாரணப் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-இ)

## 209 மருத்துவர்கள்...

என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளான மருத்துவர்களில் 30 40 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒரு மருத்துவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த 27 மருத்துவர்களும், ஹோமாகம மருத்துவமனையைச் சேர்ந்த 17 மருத்துவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, 3 மருத்துவர்கள் இதுவரை கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 1000 தாதியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, 37 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-22)

## முடக்காவிட்டால்...

காரி புஷ்பா ரம்யானி சொய்சா, சுகாதார அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் சிவில் செயலணி ஊடக மாநாட்டில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவமனைகளின் முழுமையான அமைப்பும் ஒரு மோசமான நிலையில் உள்ளது. அவசரகால விபத்துக்கள் உட்பட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தினசரி கொரோனா நோயாளிகளுக்கு கூடுதலாக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர்.

தினசரி அதிகரித்து வரும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையுடன் சுகாதார அமைப்பு பெரும் ஆபத்தில் உள்ளது. சுகாதார ஊழியர்கள் அதிகளவில் வைரஸால் பாதிக்கப்படுகின்றனர். தாமதமின்றி உடனடி தீர்வுகளைத் தேடுமாறு சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகின்றோம்.

மேலும், பிரேதஅறைகள் அல்லது மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதல்ல, தற்போதைய கொரோனா வைரஸ் நிலைமையை நிர்வகிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தான் தீர்வு - என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த இணைந்த சுகாதார ஊழியர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த ரவி குமுதேஷ், சுகாதார வல்லுநர்கள் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முடக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசை வலியுறுத்தியதற்கு பின்னால் எந்த அரசியல் உள்நோக்கமும் இல்லை.

கொரோனாத் தொற்றால் இறப்போரின் எண்ணிக்கை விகிதத்தில் இலங்கை முதல் இடத்தில் இருப்பதற்கு ஒரு காரணம், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை துல்லியமாகச் சேர்க்கத் தவறியதாகும்.

உண்மையான எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு அதிகம் தொற்றாளர்களின் எண்ணிக்கை உள்ளது. முடக்கத்தை விதிக்க மறுப்பதன் மூலம் எட்டு மில்லியன் தினசரி ஊதியம் பெறுபவர்களைப் பாதுகாப்பதாக அரசு கூறுவது நகைச்சுவையானது, அத்தகைய நபர்கள் ஏற்கனவே ஆபத்தில் உள்ளனர், என்றார் குமுதேஷ். (ஒ-இ)

## வடக்கில்...

பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7பேருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 7 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 12பேருக்கும், நொதேர்ன் சென்றல் மருத்துவமனையில் ஒருவருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 23பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 6 பேருக்கும், வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும், இளவாலை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும்,

அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் 18பேருக்கும், பளை பிரதேச மருத்துவமனையில் 5 பேருக்கும், ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4பேருக்கும், மாங்குளம் மருத்துவமனையில் இருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14பேருக்கும், வெள்ளாங்குளம் விமானபடைப்முகாமில் 3பேருக்கும், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் 2 பேருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 9பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-5)

## சிறுவர்கள்...

என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் ஜே.விஜேசூரியா தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக நாளாந்தம் சுமார் 25 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

'பெற்றோர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டாலும் கூட, தமது குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் கடைப்பிடிக்க வேண்டும்' என்றார். (ஒ-22)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மின் உதிரிப்பாகங்கள் (Electrical and Electronics) விற்பனை நிலையத்திற்கு கணினி அறிவுடைய (Computer Knowledge) வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு-**076 3165 734**

**E-mail-jenoshanark@gmail.com**

Best Wishes **மணிவிழா வாழ்த்து** Best Wishes

எமது பாடசாலையின் **பிரதி அதிபராகவும், விஞ்ஞான ஆசிரியராகவும் கடமையாற்றி இன்று (20.08.2021) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும்**




**திருமதி லதா கிருபானந்தன்**
**(பிரதி அதிபர்)**
**SLTS I, Science trd.**

அவர்கள் தமது ஓய்வு காலத்தில் மகிழ்வுடனும், சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சேவை விபரம்:**

- யா/ மயிலிட்டி ஞானோதய வித்தியாலயம் 07.08.1988 - 01.02.1992
- பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை 02.02.1992 - 31.12.1993
- யா/ மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை 01.01.1994 - 08.01.2014
- யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம். 09.01.2014 - 19.08.2021

**33** வருடகால சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறும் ஆசிரியரை வாழ்த்துவோர்

**பாடசாலை சமூகம்**

**யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் ஆனைக்கோட்டை**

**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை**

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 26.09.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளுக்கமைய நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் அங்கத்தவர் எவரேனும் தங்களால் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகள் மற்றும் விவாதிக்க விரும்பும் விடயங்களை எதிர்வரும் 15.09.2021 இற்கு முன்பதாக செயலாளருக்குக் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற மற்றும் சமர்ப்பிக்கப்படாத விடயங்கள் கூட்டத்திற்கு கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேலும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைக்கேற்ப திகதியில் மாற்றமேற்படின் அறியத் தரப்படும்.

**செயலாளர்,**
**பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை,**
**உரும்பிராய்.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்**

1. கலைமாணி
2. வணிகமாணி
3. நடனமாணி
4. இசைமாணி
5. வியாபாரமுகாமைத்துவமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் **18.09.2021 (சனிக்கிழமை)** காலை **9.00** மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் **02.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும்** சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடையவர்கள் **03.09.2021(வெள்ளிக்கிழமை)** இற்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை (Supplication Form) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாகவோ அல்லது எமது இணையத்தள முகவரியிலும் (www.codl.jfn.ac.lk) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

*பதிவாளர்*
18.08.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 08 . 1947



மறைவு
18 . 08 . 2021

## திருமதி ஜெயபாலன் கலாவதி

ஏழாலை மத்தி ஏழாலையைப் பிறப்பிடமாகவும் முதலி கோவிலடி முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாலன் கலாவதி நேற்று முன்தினம் (18.08.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா இரத்னாவதி ஆகியோரின் மகளும், ஜெயபாலனின் அன்பு மனைவியும், கஜபாகு, நளாயினி, தமயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கமலாவதி, சொக்கலிங்கம் மற்றும் சத்திரபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜாதா, சுதர்ஸன் ஆகியோரின் சிறிய தாயாரும், கோபாலகிருஷ்ணன் புவிதரன், காலஞ்சென்ற தேவநந்தன் ஆகியோரின் மாமியும், ஆதீஸ், தமிழ்வேந்தன், வைஷ்ணவன், நந்தனா - சுபவிஷ்னு ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருஷ்ணஜினா, கஜலக்ஷன் ஆகியோரின் சின்னப் பேர்த்தியும், அஜய் கிருஷ்ணாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.08.2021) வியாழக்கிழமை நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**முதலி கோவிலடி முதலாம் ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு**

**தகவல்: குடும்பத்தினர்**
**ஜெ.கஜபாகு : 077 172 7241**

# மரண அறிவித்தல்



## கதிரித்தம்பி துரைராசா

அரசொல்லை, அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் பெரியவிளான், செம்பாடு மற்றும் கலைவாணி மில்லேன், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி துரைராசா நேற்று (19.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், சிவநந்தினி (சுவிஸ்), சிவானந்தன் (ஜேர்மனி), சிவரஞ்சனி (சுவிஸ்), சிவலோஜினி மற்றும் காலஞ்சென்ற சுலோஜனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கெங்காதரன் (சுவிஸ்), ஜீவா (ஜேர்மனி), கமலநாதன் (அகிலன்- சுவிஸ்) அருட்குமரன் (உரிமையாளர் கலைவாணி மில் கொக்குவில்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகையா, சின்ன ராசா மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் வேலும்மயிலும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் மற்றும் காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், சம்பூரணம், சிவமணி மற்றும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, அற்புதலிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் அபிநயா, அபிராமி, பிரசான், ஆரங்கன், தனுசன், கபினா, அபினா, சாருஜன், அஸ்வின், சகான், பவித்திரா (மாணவி- கிழக்குப் பல்கலைக் கழகம்), சங்கீத், சம்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2021) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கொக்குவில் கிழக்கு, கலைவாணி மில்லேனிலுள்ள அமரரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைவாணி மில் லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



மண்ணில்
10.04.1937

விண்ணில்
19.08.2021

## கந்தையா துரைச்சாமி

பூநகரி செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு தம்மளை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைச்சாமி நேற்று (19.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பவானி மற்றும் ஜெயக்குமார், மணிமாறன், காலஞ்சென்ற அரவிந்தன் (செல்வம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற இந்துமதியின் மைத்துனரும், புஸ்பராணி, தோத்திரவதி ஆகியோரின் மாமனாரும், ஜெனித்தா, துஷாந்தன், பிரசன்ஜா, ஜானுஜா, றம்சியா, அபிவர்சனா, விமல்ராஜ், றுக்சனா ஆகியோரின் பேரனும், நிஸ்வந், சஸ்மிதா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2021) வெள்ளிக்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**0033616380007, 0033141540157**

**077 464 6896**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சேதுபதிக்கு போட்டியாக சந்தானம்






நடிகர் சந்தானம் மூன்று வேடங்களில் நடித்துள்ள படம் 'டிக்கிலோனா'. கார்த்திக் யோகி இயக்கியுள்ள இப்படத்தில் சந்தானத்துக்கு ஜோடியாக அனகா மற்றும் ஷிரின் ஆகியோர் நடித்துள்ளார்கள். மேலும் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங்கும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், வருகிற செப்ரெம்பர் 10 ஆம் திகதி விநாயகர் சதுர்த்தியன்று இப்படம் நேரடியாக ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் டெல்லி பிரசாத் தீனதயாளன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள துக்ளக் தர்பார் படமும் வெளியிடப்பட உள்ளது. இப்படம் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட உள்ளதாக கூறப்படுகிறது. விஜய் சேதுபதி, சந்தானம் நடித்த படங்கள் ஒரே நாளில் வெளியாவது இதுவே முதன்முறை.




# 'உலகம் கைவிட்டுவிட்டது'

## ஆப்கன் சிறுமியின் கண்ணீர் வீடியோ!



ஆப்கன் சிறுமி ஒருவர் வெளியிட்ட கண்ணீர் வீடியோவில், "உலகம் எங்களை கைவிட்டுவிட்டது" எங்கள் இறப்பை உலகம் தடுக்கவில்லை. மெதுவாக நாங்கள் வாழ்ந்தோம் என்ற வரலாறும் மறைந்துவிடும்" என கண்ணீருடன் அவர் கூறும் வார்த்தைகள் நெஞ்சை உருகச்செய்கின்றன.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்க படைகள் ஆப்கானில் இருந்து வெளியேறியதால், வெகுண்டெழுந்த தாலிபான்கள், ஆறு நாள்களில் நாட்டை தங்கள் வசப்படுத்தியுள்ளனர். தலைநகர் காபூலைக் கைப்பற்றிய அவர்கள், அதிகாரப்பூர்வமாக ஆட்சிக் கட்டிலில் அமர உள்ளனர். தாலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தான் அரசை பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் அங்கீகரித்துவிட்டன.

ஆப்கானிஸ்தானில் வசிக்கும் பூர்வகுடி மக்கள் மற்றும் பிறநாட்டினரிடையே பெரும் பதற்றமும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. கும்பல் கும்பலாக அந்நாட்டை விட்டு வெறியேறி வருகின்றனர். வேறு நாடுகளுக்கு தஞ்சமடைய காபூல் விமான நிலையத்தில் லட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் இரவு பகலாக காத்துக்கிடக்கின்றனர். ஆப்கானிஸ்தானில் தங்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிட்டதால், வேறு நாட்டுக்கு அகதிகளாக இடம்பெயர்வதைத் தவிர, வேறு வழியில்லை எனக் கூறி வருகின்றனர். இது தொடர்பாக நெஞ்சை உருக்கும் பல வீடியோக்கள் இணையத்தில் வெளியாகிக்கொண்டே இருக்கின்றன.

இந்த நிலையில் சிறுமி ஒருவர் வெளியிட்ட வீடியோவில், 'உலகம் எங்களை கைவிட்டுவிட்டது, எங்கள் இறப்பை உலகம் தடுக்கவில்லை. மெதுவாக நாங்கள் வாழ்ந்தோம் என்ற வரலாறும் மறைந்துவிடும்' என கண்ணீருடன் அவர் கூறும் வார்த்தைகள் நெஞ்சை உருகச்செய்கின்றன. இந்த வீடியோவை ஈரான் நாட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் மற்றும் பெண் பத்திரிகையாளர் ஒருவர், ஆப்கானிஸ்தான் பெண்களுக்காக என் இதயம் நொறுங்கியுள்ளது. அவர்களை காப்பாற்றுவதில் இருந்து உலகம் தோல்வியடைந்துவிட்டது. வரலாறு இதை எழுதும்' என உருக்கமாக எழுதியுள்ளார்.

அவரின் இந்தப் பதிவு சில மணி நேரங்களில் சுமார் 12 மில்லியன் பார்வைகளைக் கடந்துள்ளது.

தானாக உயரும்
**வயது!**
விடாமல் துரத்தும்
**காலம்!!**
தடுக்க முடியாதது
**நேரம்!!!**
கடக்கத் துடிக்கும்
**இளமை!!!!**
காலைத் தடுக்கும்
**சமூகம்!!!!!**
தொட வேண்டியது
**இலக்கு!!!!!!**
இத்தனை போராட்டம் தான்
**வாழ்க்கை!!!!!!!**









# இன்றைய நாள்

**மேடம்:** கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கும். உற்சாகமாக செயற்படுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கேட்ட உதவி கிடைக்கும். புதுத் தொடர்பு பெறுவீர்கள்.. பெண்களுக்கு உற்சாகம் மீளும்.

**இடபம்:** மனசாட்சிப்படி செயல்பட்டு நிம்மதி காண்பீர்கள். பேச்சினால் பிரச்சினை வராமல் கவனமாக இருங்கள். மற்றவர்களுடைய வம்பில் சிக்கி சிரமப்பட வேண்டாம்.

**மிதுனம்:** கெட்ட பெயர் ஏற்படுத்தித்தரும் செயல்களை விலக்குங்கள். எதிர்பார்ப்புகள் தாமதமானாலும் நல்லபடியாக முடியும். தனிப்பட்ட விஷயங்களை வெளி நபர்களிடம் பகிர வேண்டாம்.

**கடகம்:** எதிர்மறை விமர்சனங்களை கண்டு பயப்பட வேண்டாம். பணியில் முன்பு ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் மெல்ல நீங்கும். முன்கோபத்தை தவிர்க்கவும். உணவுப்பழக்கத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றித் தருவீர்கள். குடும்பத்தினர் விரும்பிய பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** மனைவி வழி உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். நன்மை கூடும். நண்பர்கள் மத்தியில் உங்கள் பேச்சு எடுபடும்.

**துலாம்:** உங்களின் செல்வாக்கு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வெற்றிகரமான நாள். வியாபாரத்தில் ஏற்ற இறக்கம் உண்டு. அமைதியான நாள். சாதகமான செய்தி ஒன்று வரும்

**விருச்சிகம்:** பணப்புழக்கம் மாற்றமின்றி எப்போதும்போல் இருக்கும். உங்களின் திட்டம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு:** உங்களிடம் உள்ள தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத்தொடங்குவீர்கள். உங்களின் முயற்சி வெற்றி பெற கூடுதலாக உழைப்பீர்கள்.

**மகரம்:** பிரியமான ஒருவரை சந்திப்பீர்கள். சிறு கவலை ஏற்படும். திருவோணம்: சாலையைக் கடக்கும் போதும், வாகனம் ஓட்டும்போதும் கவனம் தேவை.

**கும்பம்:** கடனை தீர்க்க முயல்வீர்கள். சோம்பலைத் தவிர்க்க வேண்டும். இன்று நிதானமான நன்மையைத்தான் எதிர்பார்க்க முடியும்.

**மீனம்:** திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மற்றவர்களின் பிரச்னையைத் தீர்த்து வைப்பீர்கள். தலைமையில் உள்ளவருக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாட்டை முழுமையாக...

யுறுத்தியுள்ளனர். அந்தப் பீடங்களின் மகாநாயக்க தேரர்களால் இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் நேற்று இது தொடர்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று ஆரம்பித்தது முதல் ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்களின் உயிரை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமைத்தாங்கும் அரசு முன்னெடுத்த செயற்பாடுகள் சிறப்பானது. அதேபோன்று, மக்களுக்கு தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் கௌரவத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனினும், தற்போது கொரோனாத் தொற்று வேகமாக பரவி வருவதால் முழு நாட்டு மக்களும் அச்சமடைந்துள்ளனர். கொரோனா நோயாளர்கள் மட்டுமன்றி உயிரிழப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. புதிய திரிபுகள் வேகமாக பரவும் என்பதோடு, அதனை கட்டுப்படுத்துவதற்கும் கடினம் என சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் எதிர்வரும் காலங்களில் ஏற்படும் சுகாதாரத் துறையின் நெருக்கடி நிலைமை குறித்து உலக சுகாதார ஸ்தாபனமும் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

ஆகவே, இந்த ஆபத்தான நிலையில் மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்காக சுகாதார நிபுணர்களின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய நாட்டை குறைந்த பட்சம் இரு வாரங்களுக்கு முடக்கி, மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது நல்லது என கேட்டுக்கொள்கின்றோம்.

ஆபத்தான இந்த கொரோனா பரவலை கட்டுப்படுத்தி மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்கு உங்களுக்கு சக்தி கிடைக்கு ஆசிர்வதிக்கின்றோம்

கொரோனாத் தொற்றால் முழு நாட்டு மக்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதால் அவர்களைப் பாதுகாப்பதற்காக விசேட மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளுக்கமைய குறைந்தது ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குமாறு மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி, பிரதமரை அந்தக் கடிதத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளனர். (ஒ-22)

## இரட்டைச்...

பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுவே இதுவரை ஒரே நாளில்பதிவான அதிகூடிய கொரோனா காவுகளின் எண்ணிக்கையாகும்.

இதேவேளை, நேற்று 3 ஆயிரத்து 793 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-22)

## புதிய....

யங்களை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2021 ஜூன் 16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் தாங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்திப்பதாக 2021.06.07 ஆம் திகதிய கடிதம் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்தச் சந்திப்பு ஒத்திவைகக்கப்பட்டதாகவும் அச்சந்திப்புக்கு விரைவில் பிறிதொரு திகதி வழங்கப்படும் எனவும் எனக்கு 15 ஆம் திகதி மாலை தொலைபேசிமூலம் அறிவிக்கப்பட்டது. இது, அடுத்த நாள் காலையில் மேலுமொரு தொலைபேசி அழைப்பின் மூலமாக உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் சொல்லப்பட்ட சந்திப்பை விரைவாக நடத்துவதற்கான திகதி மீள நிர்ணயிக்கப்படும் என்று அறிவிக்கும் இரண்டு கடிதங்கள் எனக்குக் கிடைக்கப்பெற்றன. அதற்கு மேல் எனக்கு எவ்வித தொடர்பாடல்களும் கிடைக்கவில்லை. தாங்கள் விரும்புகின்றபோது தங்களை நாங்கள் சந்திப்போம் என்பதை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

எமது நாடு சுதந்திரத்திலிருந்து மூன்று அரசமைப்புக்களைக் கொண்டிருந்தது.

ஐக்கிய இராச்சியத்தின் அரசால் அவர்களுடைய சொந்த அரசமைப்பு வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்திற்கு முன்னர், தயாரிக்கப்பட்ட அரசமைப்பு. இது, தற்போது பெருமளவு மாற்ற மடைந்துள்ளது. ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றுக்கு விரிவான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் தமது சுயாதீனமான தனித்துவங்களைக்கொண்ட ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் பகுதிகளாகும். இப் பிரதேசங்கள் இரண்டும் தற்போது தமது சொந்த சுயாதீனமான சட்டவாக்க சபைகளையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலமைச்சர்களையும் அமைச்சரவைகளையும் கொண்டுள்ளன.

அவை, கிரமமான ஜனநாயக நடைமுறைகளில் வழங்கப்பட்ட தத்தமது மக்களின்ஜனநாயகதீர்ப்புகளுக்கேற்ப ஐக்கிய இராச்சியம் என்ற வரையறைக்குள் ஆளப்படுகின்றன. இதனையே தமக்கென சொந்த சுயேச்சையான தனித்துவத்தைக் கொண்ட தமிழ் மக்களும் ஓர் ஐக்கிய பிரிபடாத இலங்கைக்குள் தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தமது ஜன நாயகத் தீர்ப்புகளின் மூலம் கோரி வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடியதாக இருந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியால் கருத்தொருமைப்பாட்டை நாடாமலே இரண்டு வருடங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசமைப்பு. தமிழ் மக்கள் 1972ஆம் ஆண்டின் அரசமைப்பு தயாரிப்புக்குப் பங்களிப்புச் செய்யவில்லை.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடியதாக இருந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியால் கருத்தொருமைப்பாட்டை நாடாமலே ஒரு மாதத்துக்கு குறைவான காலத்தில் நிறைவேற்றப்பட்ட 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்பு. தமிழ் மக்கள் 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு தயாரிப்புக்கு பங்களிப்புச் செய்யவில்லை.

1994ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேசிய தேர்தலிலும் இறைமை கொண்ட மக்களால் 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளபோதிலும், 1978ஆம் ஆண்டிலிருந்து நாம் அந்த அரசமைப்பின் கீழேயே ஆளப்பட்டு வருகிறோம். இவ்வாறு, மக்களது விருப்பத்தையோ சம்மதத்தையோ பெற்றிராத ஓர் அரசமைப்பின் கீழ் நாம் ஆளப்படுகின்றோம். 1972 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்புகளை தமிழ் மக்கள் 1956 லிருந்து தமது வாழ்விடப் பகுதிகளில் நிராகரித்துள்ளனர்; அவர்களும் தமது விருப்பமோ? சம்மதமோ? இன்றியே ஆளப்படுகின்றர்.

மேல் குறிப்பிடப்பட்டவை இலங்கை இணங்கி ஏற்றுக்கொண்டுள்ள சர்வ தேச சமவாயங்களினதும் ஆவணங்களினதும் மீறல்களாக அமைகின்றன. 1983ஆம் ஆண்டின் தமிழருக்கெதிரான படுகொலைகளின் பின்னர் இலங்கையின்தேசியபிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா தனது உதவியை வழங்கியது. இலங்கை அதனை ஏற்றுக் கொண்டது. அரசமைப்பை வகுக்கும் நடைமுறை தொடங்கியது. மாநாடுகள், சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியன இலங்கை, இந்தியா, கடல்கடந்த வெளிநாடுகள் என பல இடங்களிலும் இடம்பெற்றன. இலங்கை அரசு, அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகள் அவற்றில் பங்குபற்றினர். இந்தியா, நோர்வே, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன அடங்கிய இணைத்தலைமை நாடுகள் மற்றும் ஏனைய நாடுகள் அதில் சம்பந்தப்பட்டிருந்தன. அவற்றுள் பலவும் இந்நடைமுறை தொடர்பாகப் பகிரங்க அறிக்கைகளை விடுத்தன. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினர் இதில் ஈடுபட்டனர். இலங்கை அரசு இவ்வமைப்புகளுக்கு பகிரங்கமாகவே பல வாக்குறுதிகளை வழங்கியது.

இவையனைத்தும் பதிவு செய்யப்பட்ட விடயங்களாகும்; அவை நிறைவேற்றப்படவேண்டும். இவற்றுள் சில பற்றி நான் எனது முன்னைய கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருப்பதனால், அவற்றை மீண்டும் குறிப்பிடமாட்டேன். அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் 1988 இல் நிறைவேற்றப்பட்டது. அது போதாதென கருதப்பட்டது.

1988 இலிருந்து அடுத்தடுத்து வந்த ஒவ்வவொரு அரசும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதோடு, காத்திர பூர்வமான அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்துமுகமாக 13ஆவது திருத்தத்தின்மீது மேலும் கட்டியெழுப்புவதற்கும் இணங்கின. இந்நடைமுறைகளிலிருந்து பெருமளவு கருத்தொருமைப்பாடு பெறப்பட்டது.

அரசமைப்பைத் தயாரிக்கும் நடைமுறை இனியும் தாமதிக்கப்படலாகாது. 1972 ஆம் ஆண்டு அரசமைப்பும் 1978ஆம் ஆண்டு அரசமைப்பும் முறையே 2 வருடங்களுக்கும் ஒரு மாதத்துக்கும் குறைவான காலத்தையே எடுத்தன. தற்போதைய நடைமுறை கடந்த முப்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

இந்த நடைமுறை இனியும் தாமதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு நான் தங்களை விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது. (ஒ-22)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1948



மறைவு 18 . 08 . 2021

**திருமதி Dr.பஞ்சலிங்கம் பராசக்தி**

சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் மகாறம்பைக்குளம், வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி Dr.பஞ்சலிங்கம் பராசக்தி அவர்கள் 18.08.2021 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார் .

அன்னார் DR பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும், சோதிநாதன் (அமெரிக்கா), ஜெகநாதன் (சுவிஸ்), கலாறஜனி, யோகநாதன் (லண்டன்) பஞ்சநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஷா, உஷா, பிரதீபன் (பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் வவுனியா), தனாளினி, சுஜீவா, ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரா, தமரா, ஜெனித்தன், அபிஷன், அபிஷேக், ஹரிணி, பிரணவி, ரிஷி . அஸ்விகா, அஜீஸ், அகானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், குழந்தைவேல், காலஞ்சென்ற உமாசக்தி (லண்டன்), குகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாந்தசோலை வீதி,**
**4 ஆம் ஒழுங்கை மகாறம்பைக்குளம்,**
**வவுனியா.**

**தகவல்**
**வீ . பிரதீபன் (மருமகன்)**
**0772461865**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### நாட்டை முடக்கினால்தான்...

கொழும்பு, ஓக. 20

பொதுமக்கள் ஒவ்வொருவரும் தம்மை முடக்கிக்கொண்டு வீடுகளில் இருந்தால் நாட்டை முடக்கத் தேவையில்லை. நாட்டை முடக்கினால்தான் வீடுகளில் இருப்போம் என்று நினைப்பவர்கள் முதலில் அந்த நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு ஒருபுறம் கொரோனாவின் தாக்கத்தையும் மறுபுறம் பொருளாதார வீழ்ச்சியையும் எதிர்கொண்டுள்ளது. இந்தநிலையில், இரண்டு தாக்கங்களையும் ஜனாதிபதி தலைமையிலான அரசு சமாளிக்க வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்தால் இந்த இரண்டு தாக்கங்களும் நாட்டை விட்டு அகன்று விடும்.

நாட்டை முடக்குமாறு கோருவோரின் கருத்துக்களை அரசு உதாசீனம் செய்யவில்லை. இவ்வாறு கோருவோர் நாட்டு மக்களுக்கும் விழிப்புணர்வுக் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டிருந்தால் நாடு இந்த ஆபத்தான நிலைமையை எதிர்கொண்டிருக்காது. சில இடங்களில் மக்களின் பொறுப்புணர்வற்ற நடவடிக்கைகளினாலேயே கொரோனாவும் தனது கோர முகத்தைக் காட்டுகின்றது.

மக்களை வீதிக்கு அழைத்துவந்து அரசுக்கு எதிராகப் போராட வைத்த எதிரணியினரும், தொழிற்சங்கத்தினரும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டில் கொரோனா தீவிரமடைய இப்படியான ஆர்ப்பாட்டப் பேரணிகளும் காரணமாகும்- என்றார். (ஓ-22)

### வவுனியாவில்...

சாவடைந்துள்ளனர். வவுனியா பம்மைமடு இடை நிலை சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்திருந்தார். பெரியார்குளத்தில் சுகவீனம் காரணமாக வீட்டில் உயிரிழந்த பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

வவுனியா குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந் துள்ளார். (ஓ-110)

## யாழில் நேற்றும் ஐவர் தொற்றால் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை மேலும் 5 பேர் கொவிட்19 நோய்த் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மானிப்பாய் சுதுமலை வடக்கைச் சேர்ந்த 92 வயதுடைய ஆண் ஒருவரும் கைதடியைச் சேர்ந்த 43 வயதுடைய ஆண் ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 86 வயதுடைய ஆண் ஒருவரும், அளவெட்டியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 192ஆக உயர்வடைந்துள்ளது. (த-இ)

## சுவையான சத்தான ஓட்ஸ் சூப்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| ஓட்ஸ் | – 1/4 கப் |
| தண்ணீர் | – 1/2 கப் |
| பால் | – 2 கப் |
| ஒலிவ் ஒயில் | – 1 டீஸ்பூன் |
| கரட் | – 2 டேபிள் ஸ்பூன் |
| பூண்டு | – 2 டீஸ்பூன் |
| வெங்காயம் | – 2 டேபிள் ஸ்பூன் (பொடியாக நறுக்கியது) |
| உலர்ந்த கற்பூரவள்ளி இலை | – 1/2 டீஸ்பூன் |
| மிளகுத் தூள் | – 1 சிட்டிகை |
| கொத்தமல்லி – சிறிது (பொடியாக நறுக்கியது) | |
| உப்பு | – தேவையான அளவு |

**செய்முறை:**

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் ஒலிவ் ஒயில் ஊற்றி காய்ந்ததும், பூண்டு சேர்த்து பொன்னிறமாக வதக்கி, பின் வெங்காயத்தைப் போட்டு சிறிது நேரம் வதக்க வேண்டும். பின்னர் அதில் கரட் சேர்த்து, பச்சை வாசனை போக நன்கு வதக்கி, பின் ஓட்ஸ் சேர்த்து 3 நிமிடம் வதக்க வேண்டும். பின்பு அதில் தண்ணீர் ஊற்றி, ஓட்ஸ் நன்கு வேகும் வரை அடுப்பில் வைத்து மூடி வைத்து வேக வைக்க வேண்டும்.

அப்போது ஓட்ஸில் உள்ள நீரானது முற்றிலும் வற்றியதும், அதில் பால் சேர்த்து 5 நிமிடம் மிதமான தீயில் கொதிக்க வைத்து, பின் தேவையான அளவு உப்பு, உலர்ந்த கற்பூரவள்ளி இலை, மிளகுத் தூள் மற்றும் கொத்தமல்லி தூவி ஒருமுறை கிளறி இறக்கினால், ஓட்ஸ் சூப் ரெடி!!!





## குங்குமப்பூ குழந்தை சிவப்பாக பிறக்குமா?

ஒரு பெண் கர்ப்பமானதும் சுற்றி இருப்பவர்கள் கொடுக்கும் முதல் டிப்ஸ் குங்குமப்பூ கலந்த பாலை தினமும் குடிக்க வேண்டும் என்பதுதான்.

அப்படி குடித்தால் தான் குழந்தை சிவப்பாக பிறக்கும் என்று பலரும் கருகிறார்கள்.

உண்மையில் குங்குமப்பூ சாப்பிட்டால் குழந்தை சிவப்பாக பிறக்குமா என்பது மில்லியன் டொலர் கேள்விதான். இதற்கு மருத்துவர்களின் பதில் நோ என்பதே.

உண்மையில் குழந்தையின் நிறத்தை தீர்மானிப்பது பெற்றோரின் மரபணுக்களும், மெலனில் சுரப்பியும் தான். சூரியனின் புற ஊதாக்கதிர்களில் இருந்து நம் சருமத்தை பாதுகாப்பது தான். யாருக்கு உடலில் மெல னில் அதிகமாக சுரக்கிறதோ அவர்களுக்கு கருப்பாகவும், மெலமனின் அளவு குறைவாக இருப்பவர்களுக்கு சிவப்பாகவும் குழந்தை பிறக்கும் என்கின்றனர்.

ஆகவே நிறத்துக்கும், குங்குமப்பூவுக்கும் ஒரு துளி அளவு கூட சம்பந்தம் இல்லை என்பதே உண்மை. ஆனால் கர்ப்பிணிகளுக்கு பல வகைகளில் இந்த குங்குமப்பூ மருத்துவ ரீதியில் உதவியாக இருக்கிறது. பாலில் குங்குமப்பூவை கலந்து பருகினால் அதன் மணமும் சுவையும் வாந்தி எடுக்கும் உணர்வை கட்டுப்படுத்துகிறது. மேலும் பசியையும் தூண்டுகிறது. ஐந்தாம் மாதம் முதல் கர்ப்பிணி பெண்கள் குங்குமப்பூ சாப்பிட தொடங்கலாம்.

உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த மசாலாப்பொருளாகவும் இது உள்ளது.

குங்குமப்பூவின் சுவையும் மணமும் கவர்ந்து இழுக்கக்கூடியது. ஆகவே கர்ப்பிணிகளுக்கு இதன் மீது ஈர்ப்பு வருவதற்கான சாத்தியங்கள் அதிகம் என்பதில் சந்தேகமே இல்லை.

குங்குமப்பூவுக்கும் குழந்தையின் நிறத்துக்கும் தான் தொடர்பில்லையே தவிர இவற்றில் பலவித நன்மைகள் அடங்கியுள்ளன.

சிலர் தங்கள் குழந்தை நல்ல சிவப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக குங்குமப்பூவை அதிகளவில் சாப்பிடுகின்றனர். இது உடலுக்கு ஆபத்தானது. நாள் ஒன்றுக்கு பத்து கிராமுக்கு மேல் குங்குமப்பூ எடுத்துக் கொண்டால் அது ஆபத்துதான். பல பக்க விளைவுகளை ஏற்படுத்தும். மருத்துவரின் அறிவுரையின் படி உட்கொள்வதே சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை...

'கொரோனாவின் தற்போதைய பேராபத்தான நிலைமையில் நாட்டை முற்றாக முடக்குவதா? இல்லையா? என்பதை நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதிதான் தீர்மானிக்க வேண்டும். சுகாதார அமைச்சு இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்க முடியாது. சுகாதார விதிகளை மட்டும் எம்மால் முன்வைக்க முடியும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையில் கொரோனாவின் மூன்று அலைகளின்போதும் நாடு முடக்கப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்தது. அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். அந்த மக்கள் இப்போது நாட்டை முடக்குவதை விரும்பவில்லை. நாட்டை முடக்குவதால் மட்டும் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில், கொரோனாவின் மூன்று அலைகளும் இதற்குச் சாட்சி. இறுக்கமான புதிய சுகாதார விதிகளை மக்கள் உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும். அதேவேளை, தடுப்பூசிகளையும் மக்கள் அனைவரும் பெற வேண்டும். கொரோனா மற்றும் டெல்டா பரவல் நிலைமையில் ஒவ்வொரு மக்களின் பாதுகாப்பும் அந்தந்த மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது, என்றார். (ஒ-22)

## நகரங்களின்...

சில நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் சுயமாகவே மூடப்பட்டுள்ளதை அடுத்து, மக்கள் பொருள் கொள்வனவுகளுக்காக வேறு நகரங்களுக்கு செல்வார்களாயின், அந்த திட்டத்தினால் எந்தவித பயனும் கிடையாது. ஆயினும், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இவ்வாறு வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டமையை வரவேற்கின்றேன்.

இந்தத் திட்டம் சாதாரண மக்களை பாதிக்காத வகையில், முன்னெடுக்கப்பட வேண்டும். பல்வேறு பகுதிகளில் சிறு வியாபார நடவடிக்கைகளின் ஊடாக, வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் மக்கள் குறித்தும், சிந்தித்துச் செயற்பட வேண்டும். இதனால், மக்களை சிரமத்துக்கு உட்படுத்தாது, இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இராணுவத் தளபதி வர்த்தகர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-இ)

## நாட்டை 3 ...

பதற்கும் நாட்டை குறைந்தபட்சம் மூன்று வாரங்களுக்கு முடக்குமாறு அரசுக்கு ஆதரவு வழங்கும் 10 பங்காளிக்கட்சிகள் கூட்டாக அவசர வேண்டுகோளை விடுத்துள்ளன.

சர்வ கட்சி பொறிமுறையை வகுத்தல் உட்பட மேலும் 7 விடயங்களைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு கடிதமொன்றை மேற்படி கட்சிகள் அனுப்பிவைத்துள்ளன. அக்கடிதத்தின் ஊடாகவே இக்கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்தன தேரர், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணாயக்கார, லங்கா சம சமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச, பிவித்துரு ஹெல உருமய கட்சியின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில, தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா, எக்சத் மஹஜன பெரமுனவின் தலைவர் டிரான் அலஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டொக்டர் ஜீ. வீரசிங்க, சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் அசங்க நவரத்ன, யுத்துகம (செய்கடமை) தேசிய அமைப்பின் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

கடிதத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு,

கொரோனாத் தொற்றாளர்களால் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாலும், அவ்வெண்ணிக்கை அதிகரிக்க கூடிய அபாயம் இருப்பதாலும் சுகாதாரக் கட்டமைப்பு ஸ்தம்பிதமடையக் கூடும். எனவே, தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டை குறைந்தபட்சம் மூன்று வாரங்களுக்கு முடக்குவதே சிறந்த வழிமுறையாக அமையும்.

தற்போதைய நெருக்கடி நிலைமையானது தேசிய அனர்த்தமென்பதால் அதற்கு முகங்கொடுப்பதற்கு சர்வ கட்சி பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். இதற்கு ஆலோசனை வழங்குவதற்கு சுகாதார மற்றும் பொருளாதார துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவொன்றும் அமைக்கப்பட வேண்டும்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு உள்ளதால் அது தொடர்பில் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரச பொறிமுறை தொடர்பான நம்பிக்கையை மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டும்.

தடுப்பூசித் திட்டம் துரிதப்படுத்தப்பட வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் ஊடாக மரண எண்ணிக்கையை குறைக்ககூடியதாக இருக்கும்.

கொரோனா பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை மக்கள் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு சட்ட பொறிமுறைக்கு அப்பால், சர்வமதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சுயாதீன சேவையாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.

மேற்படி திட்டங்கள் செயற்படும் அதேவேளை நாடு மூன்று வாரங்களுக்கு முடக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தொற்றாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பால் மக்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதை தடுப்பதற்கும், மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் முடியும்- என்றுள்ளது. (ஒ-44)

## பாணின்...

பாண மாவட்டத்தில் பாண் உட்பட பேக்கரிப் பொருள்களின் விலை அதிகரிப்பு அமையும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் பாண், கேக் மற்றும் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு இறாத்தல் பாண் 5 ரூபாவாலும், ஏனைய பேக்கரி உற்பத்திகள் 10 ரூபாவாலும், ஒரு கிலோ கேக் 100 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரனை உதயன் தொடர்பு கொண்டு வினாவினான். 'தற்போது பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாமும் விலை அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே உள்ளோம். ஆனால் அரசின் அறிவிப்புக்கு முரணாக விலை அதிகரிப்பை மேற்கொண்டால் நாம் சட்டரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். விலை அதிகரிப்புத் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் கோரியுள்ளோம். அவரின் பதிலைப் பொறுத்து விலை அதிகரிப்பு அமையும்' - என்றார். (ஒ-5)

## அத்தியாவசிய...

றோம். வர்த்தகர்கள் இதனைப் பதுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டால் அவர்கள் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டிவரும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு கடந்த சில வாரங்களாகவே பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நேற்றைய தினம் இந்தத் திடீர் அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலக ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**மாவட்டச் செயலக நடவடிக்கை**

யாழ். மாவட்ட செயலகத்தின் சேவை வழங்கலை மட்டுப்படுத்தியுள்ளோம். சுழற்சி முறையில் பணியாளர்களை அழைப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் அதிகளவில் ஒன்று கூடுவதை தடுக்க பொறுப்புணர்வுடன் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அதேபோல கொன்சியூலர் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்கள நடவடிக்கைகளை மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்படுத்தப்படுகின்றோம்.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி அதனை மீள ஒழுங்கு முறையில்எதிர்வரும்திங்கட்கிழமைக்கு பின்னர் ஆரம்பிக்கக் கூடிய செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றோம். இதன் காரணமாக இந்தத் திணைக்களங்களின் செயற்பாடுகள் இன்றைய தினம் நிறுத்தப்பட்டிருக்கும்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோக ஓட்டப்பயிற்சி என்பனவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மோட்டார் போக்குவரத்து பிரிவைத் தொடர்பு கொள்வதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**அத்தியாவசிய பொருள்கள்**

அத்தியாவசிய பொருள்கள் மக்களுக்கு கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய பொருள்களுக்கு போக்குவரத்து அனுமதி வழமைபோல வழங்கப்பட்டு வருகின்றது. அனுமதிகளை முறைகேடாகப் பயன்படுத்தக்கூடாது. பால்மா, சீனி, எரிவாயு போன்ற பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அவற்றை வர்த்தகர்கள் பதுக்கக் கூடாது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் களப்பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். பதுக்கலில் வர்த்தகர்கள் ஈடுபட்டது கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**பொறுப்புடன் செயற்படுங்கள்**

மிக மிக அவசிய தேவைகளை தவிர்த்து பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்ற கட்டுப்பாட்டை மூன்று வாரங்களுக்கு நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது. மக்களை பாதுகாப்பதற்காகவே இந்த நடைமுறைகளை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. பொது மக்களும் சமூக பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய காலமாக இது காணப்படுகின்றது.

மருத்துவமனைகளில் கூட இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. புதிய வழிகாட்டலின் படி வழிபாட்டிடங்களில் ஒன்று கூடுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய குடும்ப நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் போன்றவையும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கட்டுப்பாட்டுடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புதிய சுகாதார நடைமுறையைப் பொது மக்கள் பின்பற்றி வீடுகளிலிருந்து தேவையில்லாது வெளியேறுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்ததாக அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-26)

## கிளிநொச்சியில்...

டுள்ளது. யாருக்கும் தெரியப்படுத்தப்படாமல் மிகவும் இரகசியமான முறையில் இந்த அலுவலகம் தனது பணிகளை கிளிநொச்சியில் ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் மாவட்டச் செயலகப் பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியில், பெண் தலைமை தாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களை மேம்படுத்துவதற்கான தேசிய நிலைய அலுவலகத்தின் ஒரு பகுதியிலேயே இரகசியமாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தில் தற்போது 4 பேர் பணியாற்றுகின்றனர். அவர்கள் சுழற்சி முறையிலேயே தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

'காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களுக்கே தெரியாமல் இந்த அலுவலகம் கிளிநொச்சியில் ஏன் திறக்கப்பட்டுள்ளது?' என்று வடக்கு -கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் சங்கத்தின் செயலர் ஆ.லீலாதேவி கேள்வி எழுப்பினார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது, அலுவலகம் அமைப்பதற்கு இடம் கோரியிருந்தார்கள். அதனை நாம் வழங்கினோம்- என்றார். அலுவலகத்துக்கு பெயர்ப் பலகை கூட வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடால், ஜோகோவிக், பெடரர்
# ரென்னிஸின் மன்னன் யார்?

## அமெ. பகிரங்கத்தில் மும்முனைப் போர்!



**வொஷிங்டன், ஓக. 20**

**அமெரிக்கப் பகிரங்கத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றுவது எவர் என்பது தொடர்பில் வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு எதிர்பார்ப்பு மிகுந்துள்ளது.**





பகிரங்கத் தொடர்களைப் பொறுத்த வரை பெடரர், நடால், ஜோகோவிக் மூவரும் தலா 20 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளனர். பெடரர் மற்றும் நடால் இடையே நடைபெற்ற இந்த இரு தரப்பு மோதலில் பேரெழுச்சி பெற்று மூன்றாவது ஆளாகத் தன்னையும் இணைத்துள்ளார் ஜோகோவிக். இந்த நிலையில் வரவிருக்கும் அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் இந்த மூன்று பேரில் எவர் கிண்ணம் வெல்கின்றாரோ அவர்தான் ரென்னிஸ் உலகின் ராஜா. இத்தகையதொரு பின்னணி காரணமாக இந்தத் தொடர் பரபரப்பும் எதிர்பார்ப்பும் நிறைந்த தொடராக மாறியுள்ளது. 40 வயதான பெடரர் முன்னரே ஓய்வு பெற்றிருந்தால், ரென்னிஸில் அசைக்க முடியாத வீரராக ஓய்வை அறிவித்திருந்திருக்கலாம். தற்போது நடாலும், ஜோகோவிக்கும் அவர் சாதித்ததற்கு நிகராகச் சாதித்துள்ள காரணத்தால் அமெரிக்கப் பகிரங்கத்தில் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயமும் பெடரருக்கு ஏற்பட்டுள்ளது.

அடுத்தடுத்த வருடங்களில் பெடரர் ஓய்வு பெறும் பட்சத்தில் இந்தப் போட்டி 35 வயதான நடாலுக்கும் 34 வயதான ஜோகோவிக்கும் இடையில் தொடரும் என்று கருதப்படுகின்றது. (ம)



மூன்று ஆண்டுகளின் பின்

## இங்கிலாந்து அணிக்குள் டேவிட் மலனுக்கு இடம்

லண்டன், ஓக. 20

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ளார் ஆரம்ப வீரர் டேவிட் மலன்.

கடந்த இரண்டு ஆட்டத்திலும் சிப்லி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. இதனால் அவர் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மலன் அழைக்கப்பட்டுள்ளார்.

மலன் இறுதியாக 2018ஆம் ஆண்டு எட்ஜ்பஸ்டனில் இடம்பெற்ற இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடினார். (ம)

## ரி-20 உலகக்கிண்ணம் ஆஸி. அணி அறிவிப்பு

கட்டார், ஓக. 20

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆஷஸ் தொடருக்காக ரி20 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடாமல் இருக்கத் தயார் என்று அறிவித்திருந்த சிமித் ரி20 உலகக்கிண்ணத்துக்கான அணியில் இடம்பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணி விவரம்:

ஆரோன் பின்ச் (தலைவர்), ஆஸ்டன் அகர், கம்மின்ஸ், ஜோஸ் ஹசல்வுட், ஜோஸ் இங்லிஸ், மிட்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், கேன் ரிச்சார்ட்ஸன், சிமித், மிச்செல் ஸ்ராக், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், மிச்செல் ஸ்வீப்ஸன், மேத்யூ வேட், டேவிட் வோர்ணர், ஆடம் சம்பா. (ம)





## அமெ. பகிரங்கத்திலிருந்து விலகிய நடப்புச் சம்பியன்

வொஷிங்டன், ஓக. 20

**அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் இருந்து விலகினார் நடப்புச் சம்பியனான டொமினிக் தியம்.**

இது தொடர்பில் தியம் தனது ருவிற்றரில்,

அமெரிக்கப் பகிரங்கத் தொடரையும் மற்றும் இந்த ஆண்டுக்கான எஞ்சிய பருவத்தையும் நான் தவறவிடுகிறேன். அமெரிக்கப் பகிரங்கப் பட்டத்தை தக்க வைக்க முடியாமல் போவது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த ஜூன் மாதம் எனது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையவில்லை. மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி போதிய மருத்துவ சிகிச்சை எடுத்து மீண்டும் பயிற்சியை தொடங்கு கையில் வலி ஏற்பட்டதால் கூடுதல் ஓய்வு தேவைப்படுகின்றது - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## டெஸ்ட் கிரிக்கெட்தான் கோலிக்கு எல்லாமும்!

### பீற்றர்சன் புகழாரம்

லண்டன், ஓக. 20



விராட் கோலி களத்தில் காட்டும் உற்சாகம், தீவிரம் ஆகியவற்றைப் பார்த்தால் டெஸ்ட் கிரிக்கெட்தான் கோலிக்கு எல்லாமே என்று இருக்கிறது. எந்த அளவுக்கு டெஸ்ட் கிரிக்கெட்டை நேசிக்கிறார் எனத் தெரிகிறது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பீற்றர்சன் பாராட்டியுள்ளார். இது தொடர்பில் பீற்றர்சன் மேலும் தெரிவித்ததாவது:

'விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முன்னோடிகளான, ஜாம்பவான்களான சச்சின், ராகுல் ராவிட் ஆகியோரின் தடத்தைப் பின்பற்ற தன்னை உந்தித் தள்ளுகிறார். டெஸ்ட் கிரிக்கெட்டின் ஜாம்பவான்களான சச்சின், ராவிட் உள்ளிட்டோர் கோலியின் ஹீரோக்களாக உள்ளார்கள். டெஸ்ட்டில் ஜாம்பவானாகத்தான் உருமாறுவதற்கு, டெஸ்ட் போட்டியில் மட்டுமல்ல ரி20 போட்டியிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பது கோலிக்கும் தெரியும். அதனால்தான் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு கோலி அதிகமான முக்கியத்துவம் அளிக்கிறார்.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு ஆழமான நேசிப்பு தேவைப்படும் இந்த நேரத்தில், உலகளாவிய சூப்பர் ஸ்டாரான கோலியை இப்படி உற்சாகமான நிலையில் பார்ப்பது எவ்வளவு நல்லவிதமாக இருக்கிறது. அனைத்துச் சூழல்களிலும் தன்னுடைய அணி செயல்படும் என கோலி மதிப்பிடுகிறார். ஆஸ்திரேலியா சென்று கடுமையான சூழலிலும் இந்திய அணி வென்றது. இங்கிலாந்து மண்ணில் வந்து லோட்ஸ் மைதானத்திலும் வெற்றிபெற்றது கோலியை மிகப்பெரிய அளவு திருப்திப்படுத்துகிறது - என்றார். (ம)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
'லயன் பொமனேரியன்' மற்றும் 'டாஸ்' இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு
077 117 8618, 021 205 1648

Vacancy
Receptionist, Data Entry Operator, Manager web Admin, Cash Collection.
077 773 3368

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org